
# திராவிடநாடு



2 அணா

# ★ கக்கன் கர்ஜனை ★

கக்கன் கர்ஜனை புரிகிறார்; பழங்குடி மக்களின் 'கதிமோட்சம்' காங்கிரசினிடமே இருக்கிறது என்று அறிவுரை கூறுகிறார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தன்னை அமர்த்தியிருப்பதிலிருந்தே, அரிஜனங்களுடைய நிலைமை உயர்ந்துவிட்டது என்று காரணம் காட்டி, மார்தட்டிப் பேசுகிறார். ஆனால், பழங்குடி மக்களின் நிலைமை இம்மியளவாவது உயர்ந்திருக்கிறதா என்றால், ஒவ்வொரு சேரியும், இல்லை, இல்லை, இல்லை, என்று கன்னத்தில் அறைவதுபோலப் பதிலளிக்கிறது. சேரிகளை ஒழிக்கும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று பார்த்தால், 'ஜார்ஜட் சேலையும் டபேடா ஜாக்கெட்டும், பான்சி பாக்சும், கூடலிங் கிளாசும்' இன்று சேரிகளுக்குச் சென்று சீப்பு சோப்பு கண்ணாடி கொடுத்து, சிங்காரித்துவிட்டு வரும் கணதுடைப்பு அளவில்தான் இருக்கிறது. சென்னை நகரைப் பொறுத்த மட்டில், இப்போதும் 294 சேரிகள் உள்ளனவாம். கக்கன் கர்ஜனை புரிவது இங்கெல்லாம் அல்ல. சில சர்மாக்களும், பல திருவாளர்களும் கூடிடும் திடலில். சேரிகளிலே உள்ளவர்கள், சேற்றிலும் சகதியிலும் உழல்கிறார்கள். அருவருப்பளிக்கும் நிலையில் அவர்களின் அன்றாட வேலைமுறை இருக்கிறது. நோய் நெளிகிறது, எல்லாவற்றுக்கும் காரணமான வறுமை தலைவிரித்தாடுகிறது. கக்கன் இதைக் காணமுடியாது, நேரமில்லை. அவர், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தன்னை அமர்த்தியதற்காக, ஒவ்வொரு அக்ரகாரமாகச் சென்று, தெண்டனிட்டு வருவதற்கே காலம் போதவில்லை. சேரிவாழ்மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமையைக் களைய, சென்னை கார்ப்பரேஷன் நாலுகோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரித்து, பண உதவி கோரி, சென்னை ராஜ்ய சர்க்காரிடமும் டில்லி சர்க்காரிடமும், பல முறை தூது சென்று சென்று வெறுங்கையுடன் திரும்பியிருக்கிறது. கக்கன், அந்த இராஜ்ய சர்க்காரின் கதவைத் தட்டி, காரியத்தை முடித்திட முயற்சிக்காமல், ஊரூருக்கும் சென்று காமராஜருக்குக் கட்டியம் கூறித் திரிகிறார். நடைபாதையில்மட்டும் எண்ணாயிரத்துக்கும் அதிகமான குடும்பம் வாழ்கிறது—வாழ்கிறதா, வதைபடுகிறது. பெரும்பான்மையோர், கக்கன் இனத்தார்தான். என்ன செய்தார் கக்கன்? காங்கிரசில் சேருங்கள் என்று உபதேசம் செய்கிறார்: ஒரு பழங்குடிப் பெருமகன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான இந்நாளிலாவது, சேரிவாழ் மக்களின் நிலைமை சீர்திருத்தப்பட வேண்டாமா? இதைச் சாதித்துக்கொள்ளமுடியாமல், சாதிக்க முயற்சிக்காமல், கர்ஜனை செய்வது எற்றுக்கோ? மைசூரில்உள்ள அரிஜன இலாக்காவினர், அரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்ள விரும்பினால், கதவுகள், உத்திரங்கள், ஜன்னல்கள் ஆகியவைகளை இனமாக வழங்குகிறார்களாம். கக்கன், காந்தி நாமத்தைவழங்கிவிட்டு, தன்வேலை முடிந்ததாகத் திருப்திகொள்கிறார்.

★

# ராஜா, ராஜாதான்!

ராஜா, ராஜாதான்! ராஜ்யம் போய்விட்டாலும்சரி, ராஜா என்ற பட்டமே வேண்டாமென்று அவரே அதை வெட்டி எடுத்து வெளியே வீசி எறிந்தாலும் சரி, ராஜா ராஜாவாகத்தான் இருக்கிறார்! ராஜாவாகப் பிறந்தவர், இருந்தவர், மந்திரிவேலையை ஏற்றுக்கொண்டு, அந்த மந்திரி வேலைக்கே ஒரு புதிய பெருமையை, அந்தஸ்த்தைத் தேடிக் கொடுத்துவிட்டார் என்று கருதும் மக்கள் இருக்கிறார்கள்! அவர்களை 'அப்பாவிகள்' என்று கூறுவார், அமைச்சர் பக்தவத்சலம். ஆனால் நடைபெற்ற நிகழ்ச்சியைக் கவனிக்கும்போது, அமைச்சர் தான் ஏமாளியாகி இருக்கிறார் என்று தெரிகிறது. இராமநாதபுரத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்டப்போகிறார்கள்—இதற்கு இராமநாதபுரம் ராஜாவாக இருந்து இப்போது சென்னையில் மராமத்து இலாகா மந்திரியாக இருக்கும் சேதுபதி அவர்கள் நிலதானம் தந்திருக்கிறார். என்ன காரணமோ தெரியவில்லை, இந்தப் பள்ளிக்கூடத்துக்கு கால்கோள்விழா நடத்திவைக்க அமைச்சர் பக்தவச்சலத்தை அழைத்திருக்கிறார், ஜில்லாபோர்டு தலைவர். பாவம், அமைச்சர், தமது உறவினர், அழகேசனையும் உடன் அழைத்துக்கொண்டு செல்கிறார், அங்கு காங்கிரஸ்காரர் கூடிக்கொண்டு, கால்கோள் விழா நடத்தக்கூடாது — அனுமதிக்க மாட்டோம்—எங்கள் ராஜாதான் செய்யவேண்டும்—இவரை ஏன் அழைத்துவந்தீர்கள்—என்று சரமாரியாகச் சொல்லம்பு போடுகிறார்கள்! பக்கத்திலே அழகேசன்—டில்லியிலே குட்டி மந்திரி! எதிரே, அதிகாரிகள் உடன் இருப்பவர், மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்! இந்த நிலையில், துளியும், அமைச்சருடையதன்மானத்தைப் பற்றி அக்கரை காட்டாமல், அந்த ஊர்க் காங்கிரஸ்காரர்கள், பிடிவாதமாக, எதிர்க்கிறார்கள். எவ்வளவோ விதமாகப் பேசிப் பார்த்தாராம், மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர். ''என் முகத்தில் கரிபூசாதீர்களய்யா! இப்படியெல்லாம் நடக்குமென்று தெரிந்திருந்தால் நான் இதில் தலையிட்டிருக்கவே மாட்டேன். இந்த ஒரு விஷயத்தில் என் மானத்தைக் காப்பாற்றுங்கள். மந்திரி முன்னாலே என்னை அவமானப்படுத்தாதீர்கள், உங்களுக்குக் கோடிபுண்யம்—என்று பாபம், ஆட்சிமன்றத்தலைவர், என்ன கூறிக் கெஞ்சினாரோ, யாருக்குத் தெரிய முடியும். சுமார் நாலு மணி வரையில், இருதரப் பாருக்கிடையிலும் பேச்சு நடந்ததாம். நேராக, அமைச்சர் பக்தவத்சலத்தையேபார்த்து, அந்தத் துணிச்சலுள்ளகாங்கிரசார்கால்கோள் விழா நடத்தாதீர் என்று கூறினராம், இவ்வளவு தொலைவு வரவழைத்து, இப்படியா மூக்கை அறுப்பது—என்று அமைச்சர் கோபமும் சோகமும் கொண்டிருக்கக்கூடும். எவ்வளவு எடுத்துச்சொல்லியும் கேட்கவில்லை. உள்ளூர் காங்கிரசின் எதிர்ப்புதான் வெற்றிபெற்றது! விழா நடைபெறவில்லை!! அமைச்சர் வீடு திரும்பினார்! இராமநாதபுரம் பஞ்சாயத்துபோர்டு தலைவர், ராஜகோபால சாஸ்திரியார் 'இதுகிடக்கட்டும்வாரும் என்றுகூறி, அமைச்சரை அழைத்துச் சென்று உபசாரபத்திரம் படித்தளித்தார்.

★

அடுத்த இதழில்!

சி. என். ஏ.

தீட்டும்

'ராகவாயணம்'

## 14-வது ஆண்டு

அடுத்த இதழிலிருந்து 'திராவிட நாடு' தனது 14-வது ஆண்டைத் தொடங்குகிறது.

திராவிடநாடு

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 13 ] 3—7—55 [ இதழ் 52

# படம் பாடம்

அசகாய சூரர்!
ஆற்றல்மிக்கோன்!
இணையில்லா வீரன்!
ஈடில்லாத் தலைவன்!
உழைத்துப் பெருமைபெற்றோன்!
ஊரார்க்கு உற்ற தோழன்!
எதிர்ப்புக்கு அஞ்சாச் சிங்கம்!
ஏமாற்றம் அறியாத ஏந்தல்!
ஐயாவின் அன்புக்கு உரியோன்!

ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு, ஓடோடிச் சென்று எதிர் கொண்டழைத்து, மாலை சூட்டி, மகிழ்ச்சியூட்டி "மன்னா! வருக! மாமணியேவருக! அண்ணலே! வருக" என்று புகழ்சொரிந்து வரவேற்கத் தான் செய்தனர், நமது இயக்கத்தினர்; காமராஜ் அவர்களை!!

தி.மு. கழகம் மயக்கத்தை விரைவில் உதறித் தள்ளிவிட்டது—இடைத் தேர்தலின்போது, காங்கிரசுக்கு 'ஒட்டு' சேர்த்திடும் 'ஒப்பற்ற' பணி யாற்ற மறுத்தது. அதன் பயனாக, நரகல் நடையாலேயே நம்மை ஒழித்துக் கட்டிவிட முடியும் என்று 'நப்பாசை' கொண்டதையும் 'இடம்பிடித்தாலும்' ஆரிய முன்னேற்றக் கழகம் என்று ஏசப்பட்டது!

இப்போது, குடியாத்தம் கைமேல் பலன் தந்திருக்கிறது!!

உச்சிக்குடுமியும்பூணூலும்கொண்ட கோலத்தில் உள்ள படம், தங்கள் மானத்தைப்பறிக்கிறதுஎன்று புலம்பி, துக்கதினம் நடத்த நாள் குறித்து, துந்துபி முழக்கினர் ஆரியத் தலைவர்களிற் சிலர்! படம் இப்போது பரணைக்குச் சென்றுவிட்டது!! குடியாத்தம் பலன் தருகிறது, பளிச்சுப் பளிச் சென்று மின்னுகிறது!!

படம் வெளியிட்டது தவறு என்று பகிரங்கமாக்க் கூறிக் கண்டித்திட பார்ப்பனருக்குத் துணிவு பிறந்தது!

படம் தவறானது அல்ல, உங்கள் சலசலப்புக்கு அஞ்சுபவன் நானல்ல, என்று கூறிடும் நெஞ்சு உரம் காமராஜருக்கு எழக் காணோம். வெல்வெட்டு மெத்தை, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசும் போக்கையும் மாற்றிடும் அபூர்வச் சக்திபெற்றிருக்கிறதுபோலும்!

காமராஜரின் கருத்தை வெளியிடும் பிரத்யேக உரிமையைத் தமதாக்கிக் கொண்டிருக்கும் டாக்டர் வரதராஜுலு அவர்களோ, படத்தைப் பழித்துப் பேசுகிறார். சர்க்கார் அந்தப் படத்தை வாபஸ் வாங்கிவிட்டார்கள் என்று சரணாகதிச் சிந்து பாடி, பார்ப்பனருக்குச் சந்தனம் பூசுகிறார்!

இதுபற்றி எழுத நேரிட்டதற்குக் காரணம், மதுரையில் நமது கழகத் தோழர்கள், காட்டி மறைக்கப்பட்ட, அந்தப் படத்தை ஒட்டினாராம். ஊர் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று அதனைக் கண்டு, களிப்புற்று, இதிலே என்ன இருக்கிறது அருவருப்புக் கொள்ள, உள்ள நிலைமையைத்தானே சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறது, இதற்கு ஏன் பார்ப்பனர் பதைக்கிறார்கள், போர்க்கோலம் பூண்டிருக்கிறார்கள், என்று பேசிச் செல்கிறார்களாம். இதைக் கண்டு, மதுரைப் பார்ப்பன யுவர்களுக்கு அழுகையும் ஆத்திரமும் பிறந்து, "என்ன அனியாயம்! என்ன அக்ரமம்! தீனாமூனாகானாக்களிடம் எப்படி இந்தப்படம் கிடைத்தது? எப்படி இவர்கள் இதை ஒட்டலாம்? எப்படி இதைச் சர்க்கார் அனுமதிக்கலாம்?" என்று கேட்கிறார்கள் அறிக்கைகள் மூலம்!!

மதுரையில், நமது கழகத் தோழர்கள் ஓர் பொது இடத்தில் ஒட்டியிருந்த 'படம்' போலீசாரால் அகற்றப்பட்டது என்று அறிகிறோம். காரணமும் கூறப்பட்டதாம்; போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது, என்று.

தமிழகத்தில் பல நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றின.

மாநாடுகளில், மன்றங்களில், பொதுக் கூட்டங்களில், பல்லாயிரவர் கூடித் தீர்மானம் நிறைவேற்றினர்.

கிளர்ச்சி நடைபெற்றது மும்முரமாக.

இங்கு, எங்குபார்த்தாலும் எதற்கெடுத்தாலும் வடநாட்டவர் பெயர் இட்டிருப்பது சகிக்க முடியாததாகத்தான் இருக்கிறது, இதை ஒழிக்கக் கிளர்ச்சி நடத்தத்தான் வேண்டும் என்ற கருத்துப்பட எழுதிப் பெரியார் இதை ஆதரிப்பதாக ஜாடை காட்டினர்.

ஓடும் ரயில் நின்றது—கூடிய மக்கள் தடியால் தாக்கப்பட்டனர்.

சிறைசென்றனர் ஆயிரக் கணக்கில்.

துப்பாக்கி உறுமிற்று, பிணங்கள் வீழ்ந்தனர்.

இவ்வளவுக்குப் பிறகும், இதோ, அதோ என்று தான் பேச்சு கிடைத்ததே தவிர, அடுத்தவாரம், வாரம் பத்து நாளில் என்று தான் நம்பிக்கை ஊட்டப்பட்டதே தவிர, டால்மியா புரம், கல்லக்குடி ஆக்கப்படவில்லை!!

நாலு ஆரியர் கூடினர், "நாம் கூறுகிறோம் கேண்மின்! இன்றேல் நாசம் விளையும் அறிமின்!" என்று பேசினர், படம் குப்பைக் கூடைக்குள் திணிக்கப்படுகிறது.

அவர்கள்பால் அவ்வளவு அச்சம் இருக்கிறது ஆளவந்தவருக்கு! திராவிடரிடம் அவ்வளவு அலட்சியமிருக்கிறது!

வீரசோழன் கிராமத்தில் தீண்டாமை ஒழிப்புச் சுவரொட்டி கிழிக்கப்பட்டு, அவை ஒட்டக் காரணமாக இருந்த சர்க்கார் அதிகாரிகள் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர், என்று எடுத்துக்கூறி, சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் பக்தவத்சலத்திடம் இராமநாதபுரம் மாவட்ட எம். எல். ஏ., ஒருவர் மனு தந்திருப்பதாக செய்தி தேசீயப் பத்திரிகையிலேயே வெளியிடப்பட்டிருக்கிறது.

சர்க்காரின் நோக்கம் ஏன் மூடு மந்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கிறோம்.

உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பன அம்மையின் நிலைதானா, ஆளவந்தாருக்கும்!!

நாடாள்வோருக்கு நாடி முறுக்கு இல்லையா—பார்ப்பன மிரட்டலுக்குப் பணிந்தாவிட்டனர்? ஏன்? என்று நாடு கேட்கிறது.

நாலு நாளைக்குக் கேட்பார்கள் பிறகோ மறந்துபோவர், அதுவரையில் வாயை மூடிக்கொண்டிருந்துவிடுவோம் என்று சர்க்கார் கருதுகிறது போலும்!

இது குறித்து, தெளிவு கிடைத்தாக வேண்டும்.


**அந்த நோக்கத்துடன், சர்க்காரால் வெளியிடப்பட்டு சில பார்ப்பனரால் கண்டிக்கப்பட்டு, நாட்டு மக்களிலே பெரும்பாலோருக்குத் தெரியஒட்டாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்ட, தீண்டாமை ஒழிப்புச் சுவரொட்டி போன்றவைகளைப் புதிதாக அச்சிட்டு, நாடெங்கும் வழங்கி, ஒட்டச்செய்யும் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்!**

**பொதுச் செயலாளர் இது குறித்து தக்க முறையை உடனடியாக வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.**

**நாடு, காணட்டும், நாடாள்வோரின் முதுகெலும்பற்ற தன்மைக்கு சான்றளித்த சம்பவத்துக்குக் காரணமாக இருந்த அந்தப் படத்தை—பாடம் கிடைக்கட்டும்.**

★

# மக்கள் கரமும்



# மன்னன் சிரமும்

துவக்க முதல் தூக்கு மேடை செல்லும் வரையிலும், சார்லசிடம், ஒரு தவறான நம்பிக்கை குடிகொண்டிருந்தது—எதேச்சாதிகாரமாக மன்னன் நடந்து கொள்வதை மக்கள் எதிர்க்கவில்லை என்றும், உரிமை, உரிமை என்று முழக்கமிடும் மாமன்றத்தினர், துடுக்குக் குணத்தால் அங்ஙனம் செய்கின்றனரே யன்றி மக்களின் விருப்பத்தை எடுத்துரைக்கவில்லை என்றும், எதற்கும் எவருக்கும் கட்டுப்பட வேண்டிய அவசியம் மன்னனுக்குக் கிடையாது, மன்னன் ஆண்டவனுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டியவன் என்ற பேருண்மையை மக்கள் புரிந்து கொள்ளாவண்ணம், மாமன்றத்தினர் வெற்றுரை பேசி வெறிமூட்டி வருகின்றனரென்றும், விளக்கம் உரைத்தால் மக்கள் தெளிவுபெற்று, மாமன்றத்தை ஒதுக்கித் தள்ளி விட்டு, மன்னன் பக்கம் திரண்டு நிற்பரென்றும், கருதினான். மக்கள் என்ன கருதுவர்—காலம் என்னென்ன கருத்துகளைப் பெற்றுத் தந்திருக்கிறது, என்பதைக் கணக்கெடுக்கத் தவறினான். சவுக்கடிதான் குதிரைக்கு இன்பம் தரும் என்று எண்ணுவாருண்டா! சார்லஸ் அவ்விதம் எண்ணிக்கொண்டான் — ஏமாளித்தனத்தால் அல்ல, ஏலாத ஒரு கொள்கைக்கு அடிமைப்பட்டுவிட்டதால். மக்களுக்கு எது தேவை, எங்ஙனம் அவர்களை நடத்திச் செல்ல வேண்டும், அவர்கள் நல்வாழ்வுக்கான சட்ட திட்டங்கள் யாவை என்பன போன்றவைகளை அறியும் ஆற்றலும் உரிமையும், ஆண்டவனால் அரசனுக்கு அருளப்பட்டிருக்கும் வரம் என்று எண்ணினான்—கூறினான்—நம்பித் தீரவேண்டும் என்று வலியுறுத்தினான். நம்பாதவர்களை நாட்டுக்கும் அரசுக்கும், ஆண்டவனுக்கும் துரோகமிழைக்கும் மாபாவிகள் என்று கருதினான். இதனாலேதான், மாமன்றத்தார் தந்த உரிமை மனுவுக்கு மறுப்புரை எழுதி வெளியிட்டு மக்களிடம் தந்தான். அதைக் கண்டதும் மக்கள் கருத்திலே தெளிவு பெறுவர், என்று எண்ணினான். மாமன்றமும் மக்களும், மன்னனுடைய இந்த முறை கண்டு கோபம் மட்டுமல்ல அருவருப்பும் அடைந்தனர். கொடுத்த வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிடும் மட்டரகப் போக்கினனாகிவிட்டான் மன்னன் என்று அருவருப்படைத்தனர். கடைசிவரையிலே, மன்னன் இந்த முறையைத் திறம்பட முறை எனக்கொண்டான்; எனவே, சார்லசிடம் நம்பிக்கை வைப்பதே பயனற்றது, எந்தச் சமயத்திலும், மன்னன் தன் வாக்கையும் போக்கையும் மாற்றிக்கொள்வான், நம்பி, ஒரு ஏற்பாட்டையும் ஏற்றுக்கொள்வது கூடாது, ஆபத்து என்று மாமன்றத்தினர் எண்ணினர்.

**சி.என். அண்ணாதுரை.**

மாமன்றத்துக்குப் பணிவது போல, எலியட், டிகிஸ் இருவரையும் சிறையிலிருந்து விடுவித்த மன்னன், அதனைத் தொடர்ந்து, மக்களுக்கு மகிழ்ச்சியும் நம்பிக்கையும் வளரும் வகையாக நடந்துகொண்டிருக்கலாம்! ஆனால், அவன்தான், கருத்தறியா மக்கள், தூண்டிவிடும் தலைவர்களின் சொல்கேட்டு ஆடிக் கெடுகிறார்கள் என்று கருதுகிறானே! எனவே, இந்தச் சமயம் வாளா இருப்போம், வேறோர் வேளை வரட்டும், வட்டியும் முதலுமாகத் தீர்த்து வசூலித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டு இருந்தான்.

கட்டாயக் கடன் என்பது காட்டுமிராண்டி முறை, கள்ளன் கொள்ளைக்காரன் கையாள வேண்டிய முறையே தவிர, முறைப்படி அமைக்கப்பட்ட அரசு, இங்ஙனம் செய்தல் கூடாது என்று நாடு முழக்கமிட்டது—ஐவர், அந்தக் கடன் தரமுடியாது என்று கண்டிப்பாக மறுத்தனர், அவர்களைச் சிறையில் தள்ளினான் மன்னன்.

டார்னல், கார்பெட், வால்டர், ஹெவினிங்காம், ஹார்டன்—எனும் ஐவர் வழக்குத் தொடுத்தனர், காரணமின்றிச் சிறை வைத்தது தவறு என்று; இந்த வழக்கு, நாட்டிலே பெரியதோர் பரபரப்பை உண்டாக்கிற்று; கண்மூடி தர்பாரைக் கண்டிக்காத மக்கள் இல்லை; இந்த ஐவர், தமக்காக அல்ல, நாட்டு மக்களின் பொது உரிமைக்காகவே இந்த வழக்குத் தொடுத்துள்ளனர், அவர்களுடைய வெற்றி நமது வெற்றி, அவர்கள் தோல்வி நமது தோல்வி, என்று மக்கள் எண்ணினர். மன்னன் எதைச் செய்தாலும் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும், அவன் செய்வதைத் தடுக்கும் ஆற்றலுள்ள இடம் ஏது, எனவே கசிந்துருகுவதன்றி வேறு வழி இல்லை, என்ற நிலை மாறிவிட்டது, மன்னனும் நீதிக்கும் சட்டத்துக்கும் கட்டுப்பட்டாக வேண்டும், நீதியற்ற செயலை மன்னன் செய்தால், ஏற்றுக்கொண்டாகவேண்டுமென்பதில்லை, மக்கள் மண்பொம்மைகளல்ல, உரிமை கேட்கும் வீரர்கள், என்ற புது உறுதி பொலிவுற்றது. வழக்கு மன்றத்திலே, மன்னனுடைய செயல் விவாதிக்கப்படுகிறது! முடிதரித்த மன்னன்தான், அரண்மனையில்தான் வாசம், எனினும், அவனும் தவறான முறையிலே, தன்னிச்சைப்படி நடந்துகொண்டால், நீதி மன்றம் குறுக்கிட்டு, மக்கள் உரிமையைக் காப்பாற்றத்தான்வேண்டும், என்று நாடு பேசலாயிற்று, நல்லோர் எடுத்துரைத்தனர்.

இந்த வழக்கு, பல அடிப்படைப் பிரச்னைகள் விவாதிக்கப்படவும், மறைந்திருந்த பல உண்மைகள் வெளிவரவும், வாய்ப்பளித்தது. மன்னன் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்கள், மன்னன் சட்டம் செய்யும் ஆற்றலும் உரிமையும் படைத்தவன், என்று கூறினர், ஐவர் சார்பில் வாதாடியவர்கள், சட்டம் இயற்றும் உரிமையை மக்கள் மன்னனுக்குத் தந்தனர் என்று எடுத்துரைத்தனர்,

மாமன்றம் என்பதே, மன்னன் தன் இச்சைப்படி ஏற்படுத்தியது என்று மன்னன் சார்பினர் கூறினர். இல்லை, இல்லை, மாமன்றம், மக்கள் அமைத்துக்கொண்ட உரிமைக் கோட்டம் என்று கூறி, மன்னன் வாதத்தை மறுத்தனர், மக்களாட்சிக்காகப் போரிட்டவர்கள்.

இந்த வழக்கின் முடிவைப் பொறுத்தே எதிர்கால அரசியல் முறை இருக்கும், எனவே, முழுத்திறமையையும் பயன்படுத்தி, இந்த வழக்கிலே வெற்றி பெற்றாக வேண்டும், என்று இருதரப்பிலும் முனைந்து வேலை செய்தனர்.

கட்டாயக் கடன் தரத்தான்வேண்டுமா, என்று துவங்கிய பிரச்னை, இப்போது, நாட்டை ஆளும் மன்னன் எவ்வளவு உரிமை பெறலாம், என்று ஆகிவிட்டது.

பிரிட்டனிலே நடைபெற்ற பல சம்பவங்கள், சாட்சிகளாக்கப்பட்டன; மன்னன் பணிந்த காட்சிகள் எடுத்துக் காட்டப்பட்டன, மக்கள் சரணடைந்த சம்பவங்களும் எடுத்துரைக்கப்பட்டன. அரசியல் அடிப்படைப் பிரச்னைகள் அலசப்பட்டன; நீதிபதிகள் பாடு மிகவும் சங்கடமாகி விட்டது. மன்னன் சார்பிலே வாதாடியவர்கள், அரசர்களின் பரம்பரை பாத்யதைகளைப் பற்றி விரிவுரை ஆற்றினர்; ஐவருக்காக அல்ல! அல்ல! நாட்டுக்காக வாதாடியவர்கள் அவர்கள், ஆற்றலின் பிறப்பிடமும் உரிமையின் ஊற்றிடமும் மக்களே என்று வாதிட்டனர்.

மன்னன், விசாரணையின்றி எவரையும் காவலில் வைக்கலாம், என்று மன்னன் சார்பினர் உரைத்தனர்.

அது எங்ஙனம் நீதியாகும்? குற்றமிழைத்தவனைத் தண்டிக்கத்தான் கொற்றவனேயன்றி, எவரையும் எக்காரணமுமின்றிச்சிறையில் அடைக்க ஒருகொற்றவனா! என்று மக்கள் சார்பினர் கேட்டனர்; துலாக்கோலினர் துயருற்றனர்! வழக்கு, புதுமை நிரம்பியது மட்டுமல்ல, மக்களின் மனதிலே புதியதோர் உறுதியைக் கண்டுவிட்ட பிறகு மன்னன் யாது செய்யவேண்டும் என்ற பிரச்னையை உள்ளடக்கியதாய் விட்டது.

பிரிட்டன் இனி, ஏதேச்சாதிகார ஆட்சிக்கு இரையாவதா? அல்லது மக்களின் மாண்பினையும் உரிமையையும் மதித்து ஒழுகும் மன்னராட்சிக்கு இருப்பிடம் ஆவதா, என்பதே பிரச்னையாகிவிட்டது. சிலர் அரசன் பக்கம் தீர்ப்பளித்தனர்—சிலர் மக்கள் பக்கம் தீர்ப்பளித்தனர்! சிலர், அறநெறி நிற்கத் துணிந்துவிட்டனர், விடிவெள்ளி அழகுற ஒளிவிடுகிறது!

மன்னன் தன் இஷ்டப்படி யாரையும் காவலில் வைக்கலாம், ஆனால் காரணத்தை விரைவாகக் கூறிவிடுவதே நல்லது— என்ற கருத்தை இந்த வழக்கு, கடைந்தெடுத்துத் தந்தது. எனவே, மன்னனுடைய முறையை எதிர்ப்பவர்களைச் சிறையிலே தள்ளிவிட்டு, இது பற்றி யார் என்ன கேட்க முடியும் என்று இறுமாந்து கிடத்தல் இனி முடியாது! காரணம் காட்டியாகவேண்டும்!!

மன்னன் முகத்தில் உடனடியாகக் கரிபூசுவது போலாகிவிடுமே என்று அஞ்சியே, நீதிபதிகள், கைது செய்யப்பட்ட ஐவரை, ஜாமீனில்விட இணங்கவில்லை; எனினும், அவர்களும், சிறைப்படுத்தப்பட்டவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்பதை மன்னன் கூறியாகவேண்டும், கூறாமலேயே, அவர்களை நெடுங்காலம் சிறையிலே தள்ளிவைப்பது முறையாகாது என்று தெரிவித்துவிட்டனர்.

அவர்களை விடுதலை செய்யும்படி மன்னன் உத்தரவு பிறப்பித்தான்! வேறு வழி!! நாடு, களிப்புக் கூத்தாடிற்று. மன்னன் தோற்றான், மக்கள் வெற்றிபெற்றனர்; இனி, 'இம்'மென்றால் சிறைவாசம் என்பது நடவாது, மன்னன் காரணம் காட்டியாக வேண்டும் என்று கூறிக்களித்தனர்.

மாமன்றமும் மக்களும், இந்தச் சம்பவத்தால் புதிய மதிப்புப் பெற்றது, மன்னன் தன்னைச் சுற்றிக் கடுவிஷம் நிரம்பிய காற்றடிக்கிறது என்று கருதிக்கொண்டான். நாடு எவ்விதம் இருக்கிறது என்பதை உணர்த்தும் சம்பவங்கள் இதுபோல, பல நடைபெற்றன.

ஒரு முறை, ஆட்சிமுறையைக் கண்டித்து மாமன்றத்தில் பேச்சு நடைபெற்றபோது, மதத்துறையில் நாடு விரும்பாத மாறுதல்களைச் செய்பவர்களைக் கண்டிக்கத் தலைப்பட்டது! மாமன்றத்தின் மூலம், மக்களுடைய கருத்து எவ்வாறு செல்கிறது என்பதைக் கண்டறிந்து கொள்வதைப் பொறுப்புணர்ச்சியுள்ள மன்னன் ஓர் வாய்ப்பாகக் கருதுவான், சார்லசோ தன் ஆதிக்கத்தைக் கெடுக்கும் செயலாக இதனைக் கருதினான், கடுங் கோபம் கொண்டான், மாமன்றத் தலைவருக்குத்தாக்கீது அனுப்பி, கூட்டத்தைக் கலைக்கும்படி கூறினான், மாமன்றம் மன்னனுடன் போரிட்டுத்தான் உரிமைகளைப் பெற முடியும் என்ற பாடத்தை அறிந்துகொண்டது. அதற்கான உள்ள உரமும் பெற்றுவிட்டது. எனவே அவைத் தலைவர். மாமன்றத்தைக் கலைப்பதற்கு அறிகுறியாக எழுந்துபோக முயன்றபோது, ஹாலிஸ், வாலன்டைன் என்று இரு உறுப்பினர்கள், சர். ஜான். பின்ச் எனும் மாமன்றத் தலைவரைப் பிடித்திழுத்து பீடத்திலமர்த்திப் பிடித்துக் கொண்டனர். பேசவேண்டியதைப் பேசினர்!

மாமன்றத்தின் ஒப்பம் பெறாமல் சுங்கவரி பெறுவது குற்றம்; மன்னனை அவ்விதம் செய்யும்படி தூண்டுபவர், நாட்டுக்குத் துரோகியாவர்.

யாரேனும், அந்த வரியைச் செலுத்தினால், அவரும் துரோகி என்றே கருதப்படுவார்.

மார்க்கத்துறையிலே நாடு விரும்பாத மாறுதல்களைப் புகுத்துபவரும், மாபெரும் துரோகியே.

இவ்விதமான கண்டனத் தீர்மானங்களை, நிறைவேற்றிய பிறகே மாமன்றம் கலைந்தது.

மன்னன் ஆணையின்படி நடக்கத் துடித்த மாமன்றத் தலைவர், பீடத்தில்—அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்!!

மன்னன் மாமன்றத்தைக் கலைந்துபோகும்படி உத்திரவு பிறப்பித்திருக்கிறார், கலைந்து செல்க! எனக் கூற வந்த அதிகாரி, வாயற்படியில்! மாமன்றக் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு, கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர்—பிறகே கலைந்தனர்.

தன் ஆதிக்கத்தை இந்த அளவிலும் முறையிலும், எதிர்க்கத் துணிந்தவர்களை விட்டுவைப்பது, தன் தத்துவத்துக்கே இழுக்கு என்று எண்ணிய மன்னன், எலியட் உட்பட, பல உறுப்பினர்களைச் சிறைப்படுத்தினான் — வழக்குத் தொடரப்பட்டது-வழக்குத் தொடராமல் நீண்ட நாள் சிறையில் வைத்திருப்பது சட்டப்படி சரியல்ல என்று ஏற்கனவே தீர்ப்பு இருக்கிறது! எனவே மன்னன், மாமன்ற உறுப்பினர்மீது குற்றம் சாட்டித்தான் தீர வேண்டும்.

(தொடரும்)

## சந்தாதாரர்களுக்கு

முகவரியை மாற்றும்படியும், சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள பணம் அனுப்பும் போதும் சந்தாதாரர்கள், தங்கள் சந்தா எண்ணை அவசியம் குறித்து எழுதவும்.

மானேஜர்

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

புரட்சியின் மூலம் முதலாளிகளை முறியடித்து, தொழிலாளர் ஆட்சியைக் கைப்பற்றினால்தான், தொழிலாளர் நிலை உயரும் என்று நம்பினார் மார்க்ஸ். அவருடைய காலநிலை அந்த நம்பிக்கைக்கு காரணமாயிருந்தது. ஆனால் மார்க்ஸின் காலத்துக்குப்பின், அரசாங்கத்தின் அலுவல்களில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. மக்களின் அன்றாடத் தேவைகள், வாழ்க்கையில் ஏற்படும் குறைகள், அவர்களின் அவசியமான தேவைகள் — இவைகளைப் பொறுத்தெல்லாம் இன்று அரசாங்கங்கள் அக்கரை கொண்டிருக்கின்றன. தொழிற் சங்கங்களின் வளர்ச்சி மகத்தானது, சமீபகாலங்களில். அவைகள் அரசாங்கத்தையே ஆட்டிவைக்கும் அளவுக்குப் பலம் பொருந்தியவைகளாக ஆகியிருக்கின்றன, பல நாடுகளில், ஜனநாயக முறையில், சாத்மீக வழியில், சட்ட பூர்வமாக சமுதாயத்தையே மாற்றி அமைக்க முடியும், புரட்சியின்றி புத்திசாலித்தனமாக வாக்குரிமையைப் பிரயோகித்து ஆட்சியைத் தொழிலாளரும் கைப்பற்ற முடியும் என்பதை உலக சரித்திரத்தில் காண்கிறோம் சென்ற ஒரு நூற்றாண்டு காலத்தில்.

முதலாளி—தொழிலாளி—இந்த இரண்டு வர்க்கங்களிடையே தீராப் பகை — அதன் விளைவாகப் போராட்டம்—புரட்சியைத் தடுக்க முடியாது என்றார் மார்க்ஸ். அவருடைய காலத்தில் அவர் இரண்டே வர்க்கங்களைத்தான் கண்டார். அவருக்கு அந்த முடிவுதான் தோன்றியது.

சட்டங்களின் மூலம், வரிவிதிப்பு வழியாக பணம்படைத்தவர்களின் மேல் அதிகமதிகமாக வரிகளை விதித்து, அந்த வருமானத்திலிருந்து வசதியில்லாதவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவது. இந்த நிலைமை எப்பொழுதாகிலும் ஏற்படுமென்றே மார்க்ஸ் நம்பவில்லை. அவருடைய காலத்தில் இரண்டு வர்க்கங்களும் நடந்து கொண்ட விதத்திலிருந்து அவர் அந்த முடிவுக்கு வந்தார்.

அவருக்குப் பின், அவர் எதிர்பாராத வேறொரு வளர்ச்சியும், சமுதாயத்தில் தோன்றியது. மத்திய தர வர்க்கம் என்பதைப் பற்றி மார்க்ஸ் நினைக்கவே மார்க்கமில்லை. ஆனால், அவருக்குப்பின் ஒரு பலம் பொருந்திய நடுத்தர வர்க்கம் ஒவ்வொரு சமுதாயத்திலும் தோன்றி வளர்ந்திருக்கிறது. நடுத்தர வகுப்பு எங்கு பலம் பொருந்தி இருக்கிறதோ அங்கு புரட்சி ஏற்படவே முடியாது,

முதலாளித்துவத்தில் பணம் ஒரு சிலருடைய கையில் குவியவும், முதலில்லாத அடிமை வாழ்வு வாழும் தொழிலாளரின் தொகை பெருகிக்கொண்டே போகும் என்ற மார்க்ஸிய வாதத்துக்கும் இடமில்லை. முதலாளித்துவ நாடுகளில் சிறுசிறு முதலைக்கொண்டு சிறிய தொழிற்சாலைகளையோ, சிறிய ஸ்தாபனங்களையோ கொண்டு தொழில் நடத்துபவர்களின் தொகை வளர்ந்து வருகிறது. கூட்டுறவு இயக்கங்களில் சேர்ந்து தொழிலாளர்கள் தங்கள் கூட்டு முயற்சியால் தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அதில் ஒவ்வொருவரும் பங்கும்—பொறுப்பும் ஏற்று முதலாளி—தொழிலாளி என்ற வித்தியாசமின்றி தொழில்பிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது பல இடங்களில். இன்னும் பெரும தொழிலதிபர்கள் கூட தொழிலாளரின உழைப்பைப் போற்றும் விதத்தில் தொழிலின் லாபத்தில் பங்கும், தொழிலாளருக்கு ஸ்தாபனத்தை இயக்கும் குழுக்களில் பிரதிநிதித்துவமும் கொடுத்து தொழில் அபிவிருத்தியில் தொழிலாளர் அக்கரை கொள்ளும்படி செய்திருக்கின்றனர்.

இக்காலத்தில் தனிப்பட்டவர்கள் தங்கள் சொந்த முதலைக் கொண்டு பெரிய தொழிற்சாலைகளை நடத்துபவர்கள் வெகு சிலரே. அதைவிட, இன்று ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளே அதிகமாய்க் காணப்படுகின்றன. இவைகளில் பெரும் முதல் போட்டுத் தொழில் நடக்கிறது. ஆனால் அவ்வளவு முதலும் ஒருவர் இருவருக்குச் சொந்தமானதல்ல. பல தனிப் பட்டவர்களால் அவர்கள் தங்களுடைய சிறு சிறு சேமிப்புத் தொகைகளைக் கொண்டு பங்குகள் அல்லது ஷேர்கள் வாங்கிச்சேர்க்கப் பட்ட முதல். ஜனநாயக முறைப்படி பங்குதார்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளால் தொழில் நடத்தப்படுகிறது. கிடைக்கும் லாபம் அத்தனை பங்குதாரர்களுக்கும், விகிதாசாரப்படி பிரித்துக் கொடுக்கப்படுகிறது. சாதாரண தொழிலாளர்கூட இவ்விதம் பெரிய தொழிற்சாலைகளில் பங்குதாரர்களாக முடியும். இந்தத் தொழில் முறை மார்க்ஸ் காலத்தில்தோன்றவில்லை. ஆனால் இன்று இம்முறை உலகெங்கிலும் சாதாரணமாகக் கருதப்படுகிறது. சொத்து ஒரு சிலரிடத்தில் குவியும் என்ற மார்க்ஸிய வாதம் இன்றைய நிலையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இவ்வித ஏற்பாடுகளெல்லாம் சாத்தியமாகும், என்று மார்க்ஸ் நினைத்திருக்கவே முடியாது.

'பொருளாதார சக்திகளே மனிதரின் வாழ்க்கையை உருவாக்குகின்றன, மனிதன் பொருளாதாரத்தின் அடிமை' என்றார் மார்க்ஸ். அவருடைய கருத்துப்படி, உலகில் நடக்கும் எந்தச்சம்பவமும், வரலாற்றில் நாம் காணும் நடப்புகளும் பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் விளக்கம் பெற வேண்டும்.

கிரேக்க புராணத்தில் ஒரு பெரும்போர் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. மேனலாஸ் என்பவன் ஒரு கிரேக்க இளவரசன். அவனுடைய மனைவி ஹெலன் என்பவள் உலகிலேயே இணையற்ற அழகி, பாரிஸ் என்பவன் கிரீஸிக்குப் பக்கத்தில் இருந்த மற்றொரு நாட்டு இளவரசன். அவன் சதி செய்து ஹெலனைத் தூக்கிக் கொண்டு தன்னுடைய நாட்டுக்குச் செல்கிறான். அவனைப் பழிவாங்கி ஹெலனை மீட்டுவர மேனலாஸ் பெரும்படை திரட்டி கடல்கடந்து பாரிஸின் தலைநகரான ட்ராய் நக

ரத்தை முற்றுகையிடுகிறான். தேவர்களும் இந்தப் போரில் கலந்துகொண்டு சில தேவர்கள் பாரிஸ் பக்கமும் சிலர் மேனலாஸ் பக்கமும் சேர்ந்து கொண்டு கடும் போர் புரிகின்றனர். கடைசியாக சதியின்மூலம் கிரேக்கர்கள் ட்ராய் நகரத்துக்குள் புகுந்து நகரத்தை எரித்து சாம்பலாக்கிப் பழி தீர்த்துக்கொண்டார்கள் என்று புராணத்தில் கண்டிருக்கிறது.

இதே சம்பவத்தை மார்க்ஸீய கண்கொண்டு பார்த்தால், கிரேக்க நாட்டுக்கும் பக்கத்து நாட்டுக்கும் வியாபாரத்தில் போட்டி முற்றியிருக்கவேண்டும். கிரேக்கர்கள் ஆதிக்கவெறிகொண்டு, நாடு பிடிக்கும்நோக்கத்துடனும் தங்கள் எதிரியை ஒழித்துவிட்டு தங்கள் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்கத்துடனும் பாரிஸ்மீது குற்றஞ் சாட்டி அவனுடைய நாட்டின்மீது படையெடுத்திருக்கவேண்டும்.

காதலோ, நாட்டுப் பற்றோ, மதப் பற்றோ, இவையெதுவும் வரலாற்றில் காணப்படும் சம்பவங்களுக்குக் காரணமாயிருக்கமுடியாது. பொருளாதாரத்தின் அடிப்படையிலே தான் அவைகளுக்கு நாம் விளக்கம் கூறமுடியும் என்பது மார்க்ஸின் கொள்கை.

மனிதனின் வாழ்க்கைப் பொருளாதார சக்தி ஒன்றுக்குத்தான் கட்டுப்பட்டது என்பது ஏற்றுக் கொள்ளமுடியாத ஒரு கொள்கை. மனிதனுக்கு, பசி, தாகம், இவைகளே பிரதானம். இவைகளே மனிதரை இயக்குகின்றன என்பதை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? உயர்ந்ததொரு இலட்சியம் என்பதற்காகப் பசி தாகத்தை மறந்து தியாகம் செய்பவர்கள் இல்லையா? உண்ண உணவும் இன்னும் மற்றத் தேவைகளும் கிடைத்துவிட்டால் மனிதன் திருப்தியுடன் வாழ்வான். அவனுடைய சுதந்தரம் பறிபோனாலும் அவனுக்குக் கவலை இருக்காது. சமதர்ம ஆட்சியில் அரசாங்கம் மக்களுடைய உரிமைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு அவர்களுக்குத் தேவைக்குத்தக்க ஊதியம் கொடுத்துவிட்டால் அவர்கள் திருப்தியுடன் வாழ்வார்கள் என்பது மார்க்ஸ் கருத்து. உயிரே போனாலும் போகட்டும், இருக்கும் வரை தன்மானத்துடன் வாழவேண்டும், சுதந்திரமில்லாத வாழ்க்கை அடிமை வாழ்வு. அப்படி வாழ்வதைவிட சாவதேமேல். அரசாங்கம் என்ன வசதி செய்து தந்தாலும் நினைத்ததைப் பேச உரிமையில்லை, விரும்பிய இடத்துக்குப் போக உரிமையில்லையென்று கட்டுப்பாடுகள் இருந்தால், அந்த அரசாங்கத்தில் வயிறார உண்டு வாழ்வதைவிட, சுதந்தரமுள்ள வேறு இடத்தில் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று நினைப்பவர்கள் இல்லையா?

தன்மான சுயமரியாதை உணர்ச்சி, காதல், அன்பு, நாட்டுப் பற்று, மதப்பற்று, ஒரு தலைவனின் வசீகரம் இவைகளுக்காகவெல்லாம் மக்கள் தங்கள் வாழ்க்கையையே மாற்றி அமைத்துக்கொள்ளமுடியும் என்பதை மார்க்ஸ் ஏற்றுக் கொள்ளாதது துரதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

பொருளாதாரம் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ சக்திகள் மனித வாழ்வைப் பாதிக்கின்றன. சமுதாயத்தில் ஒரு வகுப்பினர், முதல் படைத்த காரணத்தால் அல்ல பொருளாதாரத்தில் பலம் பொருந்தியதால் அல்ல, சமய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு, மற்ற வகுப்பினரை சம்பிரதாயத்தின் பெயரால், அல்லது சாஸ்திரங்களின் பெயரால் அடிமைகளாக்கித் தாசர்களாகத் தவிக்கும்படி விட்டுவிடுவதையும் பார்க்கிறோம்.

மார்க்ஸைப் பின்பற்றுகிறவர்கள் பொருளாதாரத்தில் உரிமையற்று, நசுக்கப்பட்டுக் கிடப்பவர்களைத் தான் பார்க்கிறார்கள், பொருளாதார சக்திகளின் பலத்தைத்தான் காண்கிறார்களே தவிர, சமுதாய அமைப்பில், பிறப்பின் உயர்வால் ஒரு சிலர் சுகமாக வாழவும், ஏனையோர் தாழ்த்தப்பட்டவர்களாக, தாசர்களாகத் தள்ளப்பட்டுத் தவிப்பதை ஏற்றுக்கொள்ளுவதில்லை.

இதிலிருந்து, பொருளாதாரத்தில்தான் ஏற்றத்தாழ்வுகள் பிறக்குமென்று மார்க்ஸ் நினைத்தது உண்மைக்கு முரணானது.

எந்தத் துறையாயினும் ஏற்றத் தாழ்வுகள் உண்டாவதற்கு வழியுண்டு. மனிதப் பண்பை மறந்தவர்களிடையே, மற்றவர்களையும் மதித்து, அன்புடன் அவர்களைத் தம்மைப்போலவே — தம்மை மற்றவர் நடத்தவேண்டும் என்றும் விரும்புவதைப்போலவே நடத்தவேண்டும் என்று நினைக்காதவர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் மலிந்திருக்கும். இந்த ஏற்றத் தாழ்வுகள் மறைய ஒரு வழிதான் உண்டு. புரட்சியின்மூலம்தான் அது முடியும் என்று மார்க்ஸ் நினைத்ததும் தவறு. சீர்திருத்தங்களின் வழியாக, சட்டங்களின்மூலம், மக்கள் மனதைப் பக்குவப்படுத்துவதன் மூலம் இக்காரியத்தைச்சாதிக்கமுடியும் என்பது மார்க்ஸ் காலத்திற்குப்பின் பல நாடுகளின் சரித்திரத்தைப் பார்த்தால் எளிதில் புலனாகும்.

(தொடரும்)

## நெவாடா நெய்--ஜாக்ரதை!

அமெரிக்கா இப்போது 'இனமாக' அனுப்பியிருக்கும் 'நெய்' எதிர்காலத்தில், இங்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும் என்ற அச்சம் இருந்து வருகிறது. பசுவைப் பூஜிக்கும் பாரத தேசம் என்கிறார்கள்—பசும் புற்றரையும் ஏராளம்—இங்கு பால் ஆறுபோல் ஓடிடச்செய்ய முடியும், அப்படிப்பட்ட நாட்டுக்கு, அமெரிக்காவா 'நெய்' அனுப்புவது, இது கேவலமல்லவா; இப்போது இனமாகத் தருகிறார்கள்; மெள்ள மெள்ள வலைவைப்பார்கள்; பிறகு இங்கு வியாபாரம் படுத்துவிடும் என்று கூறிக் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர். முதல் முழக்கம், ராஜ்கோட்டுக்கு அருகே உள்ள ஜாம் ஜோத்பூரில் கிளம்பி இருக்கிறது. அமெரிக்க நெய் வாங்காதீர்! என்று பிரசாரம் செய்யப்படுகிறது. அமெரிக்க நெய்க்கு இங்கு இடமளித்ததற்காக மத்திய சர்க்காரைக் கண்டித்து மடல் அனுப்பியிருக்கிறார்கள். இப்போது இங்கு அனுப்பப்படும் அமெரிக்க நெய், நெவாடா பகுதியில் உள்ள பால் பண்ணையில் தயாரிக்கப்பட்டது; நெவாடா அணுகுண்டு பரீட்சைக்காக வெடிக்கப்பட்ட பகுதியாகும், எனவே இங்கு தயாரிக்கப்பட்ட நெய்யில், 'விஷவாடை' கலந்திருக்கிறது என்று ஒரு புகார் கிளம்பிற்று; சர்க்கார் அதிகாரிகள் இதை மறுக்கிறார்கள்.

# அதிசய ஆரஞ்சு!

“பெரியவர்களைப் பார்க்க வரும்போது, வெறுங் கையோடு போகக் கூடாதல்லவா, அதனாலே இது …………”

“எனக்கு ஏனய்யா இதெல்லாம் ………”

“ஒன்றுமில்லையே, பழம், ஆரஞ்சு ………அதுவும் கூடை கூடையாகவா கொண்டுவந்தேன், ஒருடஜன் ……இதை ஏற்றுக்கொள்வதிலே என்ன தவறு………தயவு செய்ய வேண்டும்”

“சரி, சரி, வந்த விஷயம் என்ன, அதைச் சொல்லு”

வாய்க்கால் தகராறு—அதுபற்றி விளக்கமாகவும் வினயமாகவும் அந்த ஆசாமி எடுத்துச் சொன்னான். ஜில்லா கலெக்டரும், அவன் சொன்னதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டார்; பிறகு அவன் சென்றுவிட்டான்.

பழத்தட்டு எதிரே இருந்தது, கலெக்டருக்கு நாவரட்சியாக இருக்கவே, ஒரு பழம் சாப்பிட எண்ணி, ஆரஞ்சுப் பழத்தைக் கையிலே எடுத்தார், கனமாக இருந்தது! ஆச்சரியத்துடன் தோலை அகற்றினார், சுளை சுளையாகப் பவுன்கள்!! இதுபோல் மற்றும் மூன்று ஆரஞ்சுப் பழங்களில் பவுன்கள்!

இலஞ்சம் கொடுத்துத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்பிய அந்த ஆசாமி, இந்தத் தந்திரத்தைக் கையாண்டான்.

பணம் தரும்போது, வேண்டாம் என்று கூறிவிட்டால் என்ன செய்வது!

என்னவென்று எண்ணிக் கொண்டாய்! என்று கேட்டுக் கோபித்துக்கொண்டால், வழக்கின் முடிவு அதோ கதியாகிவிடுமே.

எனக்கா ‘லஞ்சம்’ கொடுக்க வந்தாய். இதோ, இரு, இரு, உனக்குத் தக்க பாடம் கற்பிக்கிறேன் என்று கூறி, போலீசிடம் ஒப்படைத்தால், பழைய வழக்குடன் புதிதாகஒன்றுமல்லவா சேரும்.

இவைகளை எண்ணிப் பார்த்த அந்த ‘ஆசாமி’ ஆரஞ்சுப் பழத்தைத் தந்தான் — அதற்குள்ளே பவுன்கள்!!

அதிகாரிகளுக்கு இலஞ்சம் தருவதற்கு, யாருக்கும் தோன்றாத தந்திரமான முறையல்லவா இது! கதை சொல்லுவார்களே, நாக நங்கை ஒருவள், அழகுமிக்கவள், அவளிடம் ஒரு முத்தம் பெற யாருக்கும் ஆவல் சுரக்கும், அவள் அளிப்பாள், பிறகு சத்தமே எழாது, முத்தம் பெற்றவன் பிணமாவான் என்று. அதுபோல, தப்பித்துக்கொள்ளவே முடியாத முறையில், அதிகாரிகளை வளைத்துப் பிடிக்கும் தந்திரம் தெரிந்த தன்னலக்காரர்கள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள், ஆனால் ஆரஞ்சுப்பழத்துக்குள் பவுன்களைத் திணித்து அளித்தவன், எல்லோரையும் தூக்கி அடித்துவிடுகிறான்!

யார் அந்த ஆசாமி? அந்த அதிகாரி யார்? ஆரஞ்சுப் பழத்துக்குள் திணித்துவைக்கப்பட்டிருந்த ‘சவரன்’ என்ன ஆயிற்று! இலஞ்சம் கொடுத்தவன் சிறை சென்றானா? அவன் வழக்கு என்ன ஆயிற்று?

இவைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்று, உங்களுக்கு இருப்பது போலவே எனக்கும் அடக்க முடியாத ஆவல்தான், ஆனால் என்ன செய்வது, இந்தக் சம்பவம்பற்றித்தீட்டியகட்டுரையில் இவைகளைப்பற்றி ஒரு குறிப்பும் காணோம்.

கட்டுரை, டைம்ஸ் ஆப் இந்தியா இதழில் S. K. செட்டூர் அவர்களால் தீட்டப்பட்டிருக்கிறது.

இலஞ்சப் பழக்கத்தை அவர் வன்மையாகக் கண்டித்து இருக்கிறார், ஏன் அந்தப் பழக்கம் ஏற்பட்டது என்பதற்கான காரணத்தையும் காட்டுகிறார்.

குறைந்த ஊதியமும், மிகுதியான அதிகாரமும் கொண்டவர்களாகச் சர்க்கார் அதிகாரிகள் இருக்கும் நிலையில் இலஞ்சம் தாராளமாகத் தாண்டவமாடுகிறது என்கிறார் செட்டூர்,

பழத்துக்குள் பவுன்களை ஒளித்துத்தர வேண்டிய அளவுக்கு, அந்த மாவட்டக் கலெக்டர் ‘நேருப்பாக’ இருந்திருக்கிறார் என்று யூகிக்க முடிகிறது. வெளிப்படையாக இலஞ்சம் கொடுக்க முடியாது, விபரீதம் நேரிடும் என்பதைத் தெரிந்துதான், அந்தத் தெகிடுதத்தக்காரன், மரியாதைக்காகப் பழம் தருவதாகப் பாவனை காட்டிப் பழத்துக்குள்ளே பவுன்களைத் திணித்துத தந்திருக்கிறான்.

சில அதிகாரிகளிடம் இவ்வளவு சிரமப்படவே தேவையில்லை! தாராளமாக, உரிமையுடன், கேட்டு வாங்குபவர்களே உள்ளனர்!

“ஐம்பது உனக்குக் கிடைக்கும்போது அவருக்கு ஐந்து கொடுக்க கசக்குதாய்யா” என்று கேட்டுக் கறக்கும் தரகர்களேகூட இருக்கிறார்களே!!

“பிள்ளையாண்டான் மகா சங்கோஜப் பிராணி!” என்று பேசி, கத்தையில் உள்ளபச்சை, இருபதா முப்பதா என்று சாவதானமாக எண்ணிப்பார்த்துவிட்டு, “சரி, அடுத்த வெள்ளிக்கிழமை உம்மகாரியம் ஜெயம் போய் வாரும்” என்று சொல்லி அனுப்பும் “தோப்பனார்களும்,” “அட அடா! உங்களுக்கு என்னமோ போல இருந்தா, நீங்க சும்மா இருங்கோ” என்று அவரை அடக்கி உட்கார வைத்துவிட்டு, “ஆறுஜெம் சேலை, அரக்குக் கரை, உடல் பச்சை, முந்தானையில் மூணு விரற்கடை அளவு சரிகை, அதுபோல ஒரு ஆறு சேலை, அவசரமாக வேண்டும். பில் அனுப்பி வையுங்கோ, மறக்காமப்படிக்கு’ என்று ஜவுளிக்கடைக்காரரிடம் பேசிடும் சகதர்மிணிகளும், இருக்கிறார்களே?

செட்டூர்அவர்கள் குறிப்பிட்டிருக்கும் கலெக்டரிடம் அப்படிப்பட்ட அசகாய சூரர்கள் யாரும் இல்லைப்போல்தெரிகிறது, அதனால்தான் ஆரஞ்சுப் பழத்துக்குள் பவுன்களைத் திணித்திருக்கிறான் அந்த ஆசாமி.

யுத்தகாலத்திலே, இலஞ்சம் தலைவிரித்தாடியதுபற்றிச் செட்டூர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, பட்டாளத்து அதிகாரிகள் மிக அதிமான அளவில் இதிலே ஈடுபட்டது பற்றித் தெரிவிக்கிறார்.

“என்னசாமானய்யா இது! மாமா இது! வேலைப்பாடு துளியும்

காணோம், செச்சே! இந்தச் சாமானைப் பெற்றுக்கொள்ள முடியாது. நான் அனுமதிக்க மாட்டேன்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார், பட்டாளத்து அதிகாரி.

சாமான் சப்ளைசெய்யும் வியாபாரி பதறவில்லை, தன் சரக்கின் மேன்மை பற்றி விளக்கவில்லை. அதிகாரியின் கோபம் அடங்க நேரம் கொடுத்தான்; பிறகு, மெதுவாக வெப்பம் மிக அதிகம் துரையே! ஒரே புழுக்கம்! என்று பேச்சைத் துவக்கினான்.

"உஸ்! ஆமாம், ஒரே கொதிப்பு" என்று ஆமோதித்தார் அதிகாரி, "மாடிக்குச் சென்று, குளிர்ச்சியாகப் பானம் சாப்பிட்டால்......" என்று கூறினான், ஜாடையைப் புரிந்துகொண்ட அதிகாரி 'ரொம்பச்சரி' என்றார். மாடியிலே ஐஸ் கலந்த பீர் ஐயாவுக்குத் தரப்பட்டது—கொதிப்பு எப்படிக் குறையாமலிருக்கும்!

"புதிதாக ஒரு வீடுகட்ட இருக்கிறேன்" என்றார் அதிகாரி.

"அப்படியா! சந்தோஷம்" என்றான் ஆள் விழுங்கி.

"இரண்டோர் மாதத்தில் உத்யோகத்திலிருந்து விலகுகிறேன்" என்றார் அதிகாரி.

"தங்கள் புது வீட்டுக்குத் தேவையான நேர்த்தியான மரச் சாமான்கள் உள்ளன, பார்க்லாமே" என்றான் காண்ட்ராக்டர்.

பார்த்தார் அதிகாரி. விலை உயர்ந்தது, வேலைப்பாடு மிகுந்தது.

"எங்கே அனுப்பிவைக்கலாம், இவைகளை" என்று கேட்கிறான் காண்ராக்டர்.

"என்ன விலை, அதைச் சொல்லய்யா" என்று கேட்கிறார் அதிகாரி.

ஒரு பசப்புச் சிரிப்புடன் நண்பர்களாகிவிட்டோம், இனிப் பணமாவது, நான் கேட்பதாவது, "நாளைக்கே நான் அனுப்பிவைக்கிறேன்" என்கிறான் காண்ட்ராக்டர். சரி என்று தலை அசைக்கிறார் அதிகாரி. மாடி மாநாடு வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது.

கீழே வந்தனர். அதிகாரி, ஆபீசுக்காக காண்ட்ராக்டர் அனுப்பிய மரச்சாமான்களை, முன்பு சரியில்லை என்று சொன்னாரே, அதே மரச்சாமான்களைப் பார்த்து, நன்றாகத்தான் செய்திருக்கிறீர், அருமையான மரம், இவ்வளவு விரைவில் செய்துவிட்டீரே! என்று பாராட்டினார். காண்ட்ராக்டர் களிப்படைந்தார்.

ஊர் பெயர் இல்லை — ஆனால் இதுபோலச் சம்பவங்கள் ஊருக்கு, நடைபெற்றுக்கொண்டு தானே வருகின்றன. இதைத் துணிந்து செட்டூர் போனறவர்களே எடுத்துக் காட்டுவது, பாராட்டுதலுக்குரியதுதான.

இலஞ்சம் எங்தெந்த நூதன முறைகளினால் தரப்படுகிறது, பெறப்படுகிறது, என்பதை விளக்கினவர், அதை ஒழித்திடுவது பற்றி, வழி கூறாததுதான் வருத்தமளிக்கிறது.

காங்கிரசாட்சியில், நாற்றமடிக்கும் அளவுக்கு இலஞ்ச ஊழல் இருப்பது, அடிக்கடி பத்திரிகைகளிலே வெளிவரும் செய்திகள் மூலம் தெரிகிறது. தெரிந்து பலன்? இலட்ச இலட்சமாகக் கொள்ளை போகிறது! இதனைத் தடுத்திடும் திறமை இல்லையோ, அல்லது இது சகஜம் என்ற போக்கோ, என்ன காரணமோ தெரியவில்லை, காங்கிரஸ் சர்க்கார், இந்தக் கேட்டினைக் களைந்திட முடியாமலிருக்கக் காண்கிறோம்.

முகத்தைத் துடைப்பதுபோல' எப்போதாவது, சர்க்கார் பெற்ற வீர வெற்றிபற்றிப் பட்டியல் வருகிறது—ப்யூன் பாண்டுரங்கம் ஒரு வியாபாரியிடம் தீபாவளியின் போது இரண்டு ரூபாய் இனாம் வற்புறுத்திப் பெற்றதற்காக ஒரு மாதகாலம் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறான், என்ற செய்தி. ஆரஞ்சுப் பழத்துக்குள் பவுன்களும், தாகசாந்தியும் தரும் பேர்வழிகளிடம், கைநீட்டிடும் பெரிய புள்ளிகளின்மீது சர்க்காரின் கண்ணும் பாய்வதில்லை, ஒருவரிருவர் பிடிபட்டாலும், ஏ! அப்பா! ஒரு கோர்ட் இரண்டு கோர்ட்டா போகிறார்கள்!! சர்க்கார் இலஞ்சம் வாங்கும் பேயர்களையும் அந்தத் தீய சக்தியால் தங்கள் சுய இலாபத்தைத் தேடுபவர்களையும் பொது மக்கள் மன்றத்தில் நிறுத்தி, அவர்களின் 'மானம்' பறிக்கப்படும் நிலையை உண்டாக்கவேண்டும்! இதைச் செய்ய மன உறுதிமட்டுமல்ல, மாசுபடாத கரம் வேண்டும், மந்திரிமார்களுக்கு!!

★

## அரசியல் புது மொழிகள்

[ஆய்ந்து பார்த்தால் பொருள் அறிவீர்]

—[]—

ஒட்டியதை விட்டிடுவீர், ஐயன்மீர்!
இனி ஒட்டேன் புதிதாக ஒருபோதும்.

*

கட்டிய கங்கணம் அவிழ்த்திடுவீர்
காரியம் சித்தி மகிழ்ந்திடுவீர்!

*

குற்றம் குற்றந்தான் என்செய்வேன்
நேசம் கொடுத்ததை மறந்திடுதல்
அழகாமோ!

*

சோவியத் வீசிடும் செண்டாலே
சோகம் பொங்குது மென்மேலே.

*

கருப்பல்ல பதவிதான் என்றேன் நானே
இரும்பும் இதோ என்று தந்தார்தானே!

•

ஆனந்தம் கெடுத்திடவா
அழைத்தீர்கள், அடிகளாரே!

*

ஆளுக்கோர் சொல் விசியாச்சி
அடிகள் பேச்சுச் செல்லாக் காசாச்சி!

*

நால்வர் கூடிப் பேசுவது
ஐவர்கூட வழிசெய்யும்.

*

ஆகஸ்ட்டு அருமை
செப்டம்பரில் தெரியும்.

*

வடக்கே எல்லாம் என்பிரேல்
வாழ்வதெங்ஙனம் அங்கே நான்?

*

எல்லைத் தொல்லை உள்ளமட்டும்
என்னை மிஞ்சும் ஆளில்லை.

*

ஊசிப் பிரச்னை பழசாச்சி
உண்டோ புதிதாய் ஏதேனும்?

*

சிந்தை அறிந்து வந்திடவே
செல்வேன் பறந்து எங்கெங்கும்.

*

சட்டம் வருமாம் இனிமேலே!
என் திட்டம் வெற்றி, இந்நாளே!

*


பாலம் பலந்தான் பாலாறில்
தண்ணீர் இருக்குது மைசூரில்!

*

நானும் நானும் அங்கில்லை
நுழைந்து பார்த்தோம், வழியில்லை.

*

இங்கும் இவர்கள் வந்துவிட்டால்
இங்குலாப் கோஷம் எங்கேதான்?




தம்பி,

அமைச்சர் சுப்ரமணியம் ரொம்ப ரொம்ப ரோஷக்காரர்!

நிறுத்து அண்ணா! யார் ஒப்புக் கொள்வார்கள் இதை. துளியாவது அவருக்கு ரோஷம் இருப்பதாகக் காணோமே, என்று கூற எண்ணுகிறாய்.

தம்பி, சென்ற கிழமை அவர் லால்குடியிலும் திருச்சியிலும் பேசியதைப் பத்திரிகையில் பார்த்திருப்பாயே, அதற்குப் பிறகுமா, அவர் ரோஷக்காரர் என்று ஒப்புக் கொள்ள மறுக்கிறாய் என்கிறேன் நான்.

போ! போ! அண்ணா! ஏதோ இரண்டோர் கூட்டத்திலே தலைகால் தெரியாமல் அந்த ஆசாமி துள்ளிக் குதித்து, கண்மண் தெரியாமல் பேசிவிட்டதாலேயே, அவரை ரோஷக்காரர் என்று கூறிவிடமுடியுமா — எத்தனையோ வில்வங்கள் துளசிகள், விதவையானதுகள், இதைவிடக் கடுமையாகத் தாக்கிப் பேசி, தமது எரிச்சலைக் குறைத்துக்கொள்ள முயன்றன; இதை ஒரு காரணமாகக் கொண்டு, அமைச்சர் சுப்ரமணியத்தை ரோஷக்காரர் என்று கூறினால், நான் ஒப்புக்கொள்ளமுடியாது — ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ரோஷக்காரர்தான் என்பதை நாட்டுக்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பொன்று அவருக்குக் கிடைத்தது—ஆனால், அவரோ தமது ரோஷத்தைச் சுருட்டிவைத்துக்கொண்டு, அகப்பட்டதைவிடுவேனா என்று கூறினாரே தவிர, ரோஷக்காரராக நடந்துகொள்ளவில்லை என்று கூறுவாய்.

தம்பி! கிடக்கட்டும்; நமக்குள் ஏன் தகராறு. அவர் கோபக்காரர், அதை ஒத்துக்கொள்கிறாயா? என்று கேட்கிறேன் — மறுக்கமுடியாதல்லவா உன்னால்!! அதிலும் சென்றகிழமை 'கோபாதிபதி' அவருக்கு உச்சஸ்தானத்தில் இருந்திருக்கிறான்! எப்படி இல்லாமலிருக்கமுடியும். குடந்தையில் வரவேற்பு, திருச்சியில் விழா, சென்னையில் கொண்டாட்டம், கோவையில் குதூகலம், மதுரையில் மகத்தான வரவேற்பு என்றெல்லாம் பத்திரிகையில் செய்திகள் வருகின்றன —எல்லாம் தீனா மூனா கானாக்களுக்கு! இதோ அவர் இருக்கிறார், அமைச்சர், வழக்கறிஞர், ஆச்சாரியாரின் அத்யந்த நண்பர்; அவரை அல்லவா நாடு இப்படிக் கொண்டாடவேண்டும். நாவலர் நெடுஞ்செழியனுக்கா இப்படிப்பட்ட நல் வரவேற்புகள் என்று எண்ணும் போதே உள்ளம் எரிமலையாகிறது —கக்கிவிட்டார்!!

சப்தரிஷீஸ்வரர் கோயில் அதிகாரிகள் பூர்ண கும்பம் எடுத்து வரவேற்க, எடயாத்து மங்களத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஹாலாஸ்யநாத குருக்கள், லால்குடி தாலுக்கா அர்ச்சகர் சங்கத்தின் சார்பில் வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்க, வருக! அமருக! மாலை அணிந்து கொள்க! என்று வட்டாரப் பெரியவர், ராஜா சிதம்பரம் அன்பு ஒழுக ஒழுக உபசரிக்க, பவனிவந்த, சென்னை ராஜ்ய நிதி அமைச்சர் கனம் சுப்ரமணியம் அவர்கள், பிரம்மானந்தமடைந்து, ஓஹோ ஹோ! நமக்கும் இவ்வளவு அமோகமான ஆதரவு இருக்கிறதா, இனி என்ன தயக்கம், இதுகளை இதே நேரத்தில், தீர்த்துக் கட்டிவிடவேண்டியதுதான் என்று தீர்மானித்து, நமது கழகங்களின் மீது பாய்ந்திருக்கிறார் சென்ற கிழமை!! ஆஹாஹாரம் செய்து தமது மலைபோன்ற உடல் குலுங்கக் குலுங்க ராஜா சிதம்பரம் நகைத்திருப்பார்; அவ்வளவு காரசாரமாகப் பேசினாராம் அமைச்சர் ராஜா சிதம்பரம் அவர்களின், வீரதீரத்தைப் பாராட்டினாராம்!!

ராஜா சிதம்பரம் முன்பு காங்கிரசை எதிர்த்துவந்தார்; இப்போது காங்கிரசில் சேர்ந்துவிட்டார்; இது கோழைத்தனமல்ல; இதுதான் வீரம்! மந்திரியின் மணிவாசகம் இது. இதன் பொருள் பற்றிய விளக்கத்தைப் பிறகு கவனிப்போம், தம்பி! முதலில், இவர் இது போலப் பேசவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதுபற்றி எண்ணிப் பார்த்தால், ருசிகரமான பல விஷயங்கள் தெரியும்.

யாராரோ ஏதேதோ பேசி இருக்கிறார்கள், ராஜா சிதம்பரத்தின் போக்குப்பற்றி! அமைச்சரிடமே சிலர் கூறியிருக்கக் கூடும்—பலர் அவர் காதில் படும்படி பேசி இருக்கவேண்டும். அல்லது, தன் போக்கைக் கேவலமானது, நாணயமற்றது, நயவஞ்சகமானது என்று பலரும் கூறி ஏசுகிறார்கள், என்று ராஜா சிதம்பரம் அவர்களே, அமைச்சரிடம் கூறி அழுதிருக்க வேண்டும்.

"பாரப்பா பார்! இந்தப் பெரிய மனிதர்களுடைய யோக்யதை எப்படி இருக்கிறது பார்! ராஜா சிதம்பரம், காங்கிரஸ் மந்திரியை வரவேற்கிற காட்சியைப் பார்! காங்கிரசை முழு மூச்சாக எதிர்த்த கனவானப்பா இவர்! இப்போது பார், காவடி தூக்கி ஆடுகிறார்"

"காங்கிரஸ் கவிழ்ந்துவிடப்போகிறது. எதிர்க் கட்சிகளுக்குத்தான் சான்சு. அதிலே இருந்தால்தான் நமக்கு ஒரு மந்திரி வேலைகிடைக்கும், என்கிற ஆசை மனஷனைப் படாதபாடு படுத்திற்று—பிறகோ, காங்கிரஸ், பீடத்திலே உட்கார்ந்து கொண்டது — ஆசாமிக்குச் சப்பிட்டுவிட்டது — இனிக் காங்கிரசிலே சேர்ந்தால்தான் எதாச்சும் துண்டு துணுக்காவது கிடைக்க முடியும் என்கிற எண்ணம் ஏற்பட்

டது—இப்போது, எங்கள் மந்திரி! எங்கள் மந்திரி! என்று மங்களம் பாடுகிறார்! பதவிப்பித்தம் இருக்கே அடே அப்பா! ஆட்டிப்படைக்குது"

"பெரியவீராதிவீரர்போலே பேசி வந்தார்! காங்கிரஸ் பதவிக்கு வராது என்கிற தைரியத்திலே! இப்போது ஒரே பயம் பிய்த்துத் தின்னுது. எதிர்க்கட்சியிலே இருந்தா ஒரு காசுக்கும் பிரயோஜனமில்லே என்கிற பயம் வந்துவிட்டுது. எனவே சரணாகதிப் படலம் ஆரம்பமாகிவிட்டது"

இப்படிப் பலர் பலவிதமாகப் பேசாமலிருந்திருக்க முடியுமா!

இவ்வளவு சாவதானமாகவும் அமைதியாகவும் பேச முடியாதவர்கள், சுருக்கமாகப் பேச, கடு சொற்களைப் பயன்படுத்தி இருக்கக் கூடும்.

கோழைத்தனம்
பதவிப்பித்தம்
சுயநலவெறி

என்பனபோன்ற பட்டங்களைச் சூட்டியிருக்கக்கூடும். இது பற்றி ஏதோ ஓர் அளவுக்குத் தெரிந்ததால் தான், அமைச்சர் சுப்ரமணியம், ராஜாசிதம்பரத்தின் போக்கை ஆராய்ந்திட வேண்டிய அவசியம் வந்தது. அந்த அறிஞர் பெருமானின் அபார ஆராய்ச்சியின் முடிவு யாதெனின், ராஜாசிதம்பரம் காங்கிரசிலே வந்து சேர்ந்தது கோழைத்தனமாகாது, அதுதான் வீரம் என்பதாகும்.

காட்டிக்கொடுத்தவர் — கட்சி மாறியவர்—என்றெல்லாம் கண்டிக்கிறார்கள் ஊரார், இதோ ஒரு 'கனம்' வருகிறார், வாழ்க வீராதிவீரனே! என்று வாழ்த்துகிறார், விருதளிக்கிறார்.

பொதுமக்கள், ராஜா சிதம்பரத்தின் போக்கை, எப்படி வரவேற்றனர், எத்தகைய தீர்ப்பளித்தனர், என்பது மாவட்ட ஆட்சிமன்ற தேர்தலில் தெரிந்தது. மிகமிகச் சாமான்யர் தர்மு, நமது கழக மாவட்டச் செயலாளர், அவர் தூக்கி அடித்தார் இந்த கிங்காங்கை! இப்போது, குப்புற விழுந்தவருக்குத் தங்கத் தோடா தருகிறார், அமைச்சர்! நல்ல ஜோடி! பொருத்தமான கூட்டாளிகள்!! அமைச்சர் ராஜா சிதம்பரத்தைப் பாராட்டி, வீரராக்கி, உபசரித்ததுடன் இருந்திருந்தால், நமக்கு வேலையே எழாது; அமைச்சர் அத்துடன் விடாமல், பெரியாரென்றும் அறிஞர் என்றும் சொல்லிக்கொண்டால் போதுமா, அவர்களுக்கு இத்தகைய வீரம் வரவேண்டாமா!! என்று கேட்டிருக்கிறார்! அருமை, அருமை!! அமைச்சர் பெருமானே! உமது அறிவின் முதிர்ச்சி இருக்கிறதே, அருமையினும் அருமை!! ராஜா சிதம்பரத்தைப் பிடித்துக்கொண்ட வீரம் எமக்கும் பிடிக்கவேண்டும் என்கிறீர்; எவ்வளவு அழகாக வட்ட வடிவமாக, வெண்ணிலவு போல உடலெங்கும் காட்சி அளிக்கிறது, என்று குஷ்ட நோயாளியைப் பாராட்டிவிட்டு அதுபோல உமக்கும் வரலாகாதா என்று வேறு கூறுவதுபோல இருக்கிறது, உமது பேச்சு.—என்றெல்லாம் கூறத் தோன்றவில்லை, தம்பி! எனக்கு. நான் முறுக்குத் தளராத வாலிபனாக இருந்தபோது கேள்விப்பட நேரிட்ட ஒரு கதை—நிஜச்சம்பவம்—நினைவிற்கு வந்தது.

மணி பத்தாகும் — பாவை பாகு கனிமொழி தருவாள், பாலில் சீனியும் சேர்த்துத்தருவாள்—பருகுவான், என் நண்பன், எனினும் அவன் நினைவு பத்மாவின் பஞ்சணை மீதிருக்கும் — பத்மா அவன் மாதவி, அவன் கண்ணகியின் பெயர்குணவதி, அவனுக்குப் பெயரோ அன்பரசன்! கொட்டாவி விடுவான், கோகிலம், அவன் குறிப்பறிந்து வெற்றிலை மடித்தளிப்பாள்! குதப்பிவிட்டு, கடைவீதி சென்று நொடியில் வருகிறேன்—ஒருகப் சாயா சாப்பிட்டுவிட்டு என்பான்! குணவதி, இதற்கு ஏன் வெளியே போகவேண்டும், இதோ நொடியில் நான் தயார் செய்கிறேன், என்பாள். செச்சே! காலை ஆறுமுதல் இரவு பத்துவரை தான வேலைசெய்து அலுத்துக் கிடக்கிறாயே, இனியும் உனக்கேன் சிரமம், இதோ ஒரு அரைமணி நேரம், வந்துவிடுகிறேன், என்று கூறுவான், பத்மா அழைக்கிறாள் அவன் என்ன செய்வான்! சீக்கிரம் என்பாள் குணவதி கொஞ்சு மொழியில்! 'இதோ' என்பான், அவனும் கொஞ்சுவதுபோல; எதற்கும் கதவைத் தாளிட்டுவை, என்று கூறிவிட்டு கோடிவீதிக்கு, ஓட்டம் பெருநடையாகச் செல்லுவான். சாயா கடை திறந்திருக்கும், அங்கு அவன் செல்லான், நில்லான், நேரே அங்கு!

கதவு தாளிட்டிருக்கும், இடுக்கின் வழியாகப் பார்த்தால் விளக்கொளி மினுக்கிடும்.

மெள்ளத் தட்டுவான், "பத்மா! பத்மா!"—

பத்மா படுக்கையில் — தூக்கமல்ல. கோபம்!

கதவு தட்டுவான், அவள் கண் மூடுவாள்! இதழில் புன்னகை இருந்திடும்!!

பத்மா! பத்மா!—மெல்லிய குரலில் தான் கூப்பிட முடியும், அண்டை அயலார் காதில் விழக்கூடாது.

பத்மா, அவன் படும்பாடு அறிவாள், எனினும் தான் படும் பாடு அறியாமல் நடந்துகொள்வதற்குத் தண்டனை தருவதாக எண்ணிக்கொண்டு நீண்ட நேரம் கதவு திறக்கவே கூடாது என்று துணிவாள்.

பத்மா! பத்மா! ஏ! பத்மா!

அவள் மனம் இளகிவிடும் இன்ப இரவு இப்படி சங்கடத்தோடு தொடங்கலாமா! அப்போதுதான் விழித்துக்கொண்டவள் போல, யாரது? என்பாள், 'நான்தான்...... பத்மா......நான்தான்' என்கிறான், சாயா சாப்பிடக் கிளம்பியவன். "நான்தான் என்றால்" என்று கேட்டபடி, பூங்கொடி அசைந்தாடி வருகிறது, கதவு திறக்கிறது, கைவளை ஒலிக்கிறது, கன்னம் படாதபாடுபடுகிறது.

"போதும் உங்களோட கொஞ்சுதலும், சரசமும்"

"என்ன பத்மா! ஏன் ஒரு மாதிரியா இருக்கறே"

"மணி என்ன இப்ப?"

"பத்து இருக்கும்"

"குணா கடியாரத்திலே பத்து—பத்மாவீட்டுக்கடியாரம் இப்பபன்னிரண்டு அடித்தது"

"இருக்காதே!"

"சரி, ஒரு அரையோ காலோ குறைவாக இருக்கட்டும் — ஆனா, ஏனுங்க இப்படி என் மனசை சங்கடப்படுத்தறிங்க. எவ்வளவு நேரம் விழிச்சிகிட்டு இருக்கறது—பத்து மணிக்காச்சும் வரப்படாதா"

"எப்படி, பத்மா, அவ்வளவு பொழுதோடு வரமுடியும். யாராவது பார்த்துவிட்டால்........"

"பார்த்துவிட்டால்தான் என்னவாம்! அட அடா! இந்தப் பாழாய்ப்

போன பயம் ஏன் உங்களுக்கு இவ்வளவு இருக்கிறதோ……"

"கண்டவர் கண்டபடி பேசுவார்களே என்கிற பயம்தான்……"

"பயம்! பயம்! பயம்! செச்சே இவ்வளவு கோழையாக இருக்கக் கூடாது—ஆண்பிள்ளைதானே நீங்கள்…………பக்கத்துவீட்டு மக்கு இருக்கே, சொக்கு, உங்க சினேகிதர் சிதம்பரத்தோட ஜோடி…… அவர் எத்தனை மணிக்கு வந்தார் தெரியுமா, எட்டு கூட அடிக்கல்லே அவர் வருகிறபோது……உங்களைப் போல பயந்து பாதிராத்திரிக்குத் திருடன்போலவா அவர் வருகிறார். அவருக்கு இருக்கிற தைரியம் ஏன் உங்களுக்கு வரக்கூடாது, பயந்து பயந்து சாகிறீர்களே—செச்சே இவ்வளவு கோழைத்தனம் கூடாது… …………"

இப்போது கனம் சுப்ரமணியனார் பத்மா பாணியில் பேசுகிறார்; கதை நினைவிற்கு வந்ததும் எனக்கு இப்படித்தான் தோன்றிற்று. ராஜா சிதம்பரம் எவ்வளவு தைரியமாகக் கட்சி மாறினார், மக்கள் எக்கேடோ கெடட்டும், எப்படி வேண்டுமானாலும் பேசட்டும், காரியம் பெரிதே தவிர, கண்ணியம், நாணயம் இவைகளெல்லாம் அல்ல, என்று துணிந்து கதராடைக் கூடாரத்துக்குள் நுழைந்திருக்கிறார், இதைப் பார்க்கிறீர்களே, ஏன் உங்களுக்கு அந்தத் தைரியம், வீரம், வரவில்லை, என்கிறார். வழி தவறி நடந்திடும் வாலிபனுக்கு விருந்தளித்து வசியப்படுத்த முனையும் வழுக்கி விழுந்த வனிதையின் பேச்சுப்போல, நாட்டில் மாபெரும் போராட்டம் நடாத்தி விடுதலை பேற்றுத் தந்ததென விருது படைத்த காங்கிரசில் கலந்து, கனமானவர் பேசுவது, உண்மையாகவே வெட்கக்கேடுதான்! ஆனால் என்ன செய்வது, ஆசை வெட்கமறியாதாமே!!

அமைச்சர் பெருமானின் அகராதிக்கு, நாம் மதிப்பளிக்க மறுக்கிறோம்; அவருடைய அழைப்பு, ராஜா சிதம்பரம் போன்றோரோடு நிற்கட்டும், தமக்கென்று ஒரு கொள்கையும் அதிலே வெற்றி காணப் பணியாற்றவேண்டும் என்ற உறுதியும் திறமையும் பெற்றோர்களிடம் இத்தகைய அழைப்பும் அங்கலாய்ப்பும், நிந்தனையும் கையாண்டியும் வீசிப் பயனில்லை.

இதை ஓரளவுக்கு உணர்ந்து, அமைச்சர், கடைக்கண் காட்டுவதை நிறுத்திக்கொண்டு, கனலை உமிழ்ந்து பார்த்திருக்கிறார்; கனிமொழி கேட்டுச் சொக்கிடாத நிலை மட்டுமல்ல, கனலைக் கண்டு கலங்கிடாத உள்ளமும் நாம் பெற்றிருக்கிறோம் என்பதை அவர் அறியார் போலும். அவருடைய குருநாதரின் அக்கினி யாஸ்திரங்களைக் கண்டு கெக்கலி செய்தவர்களிடம், இவர் நீக்குச்சியாஸ்திரங்களை வீசிப் பார்ப்பது விந்தைதான்!

அமைச்சர், நாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே காட்டப்பட்ட ஓரவஞ்சனைபற்றிக் கூறிவருவது கண்டு, பீதி அடைந்திருக்கிறார்.

இவர்மட்டுமல்ல, காங்கிரஸ் வட்டாரத்தை, ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் கூட்டங்கள், ஒரு கலக்கு கலக்கிவிட்டிருக்கிறது.

மந்திரிகளாம், மந்திரிகள்! சுளை சுளையாகப் பணம்மட்டும் வாங்குகிறார்கள் சம்பளமாக! துளியாவது சூடு சொரணை காணோம். சூறாவளி போல பிரசாரம் நடைபெறுகிறது, வடநாடு, தென்னாடு என்று! தடுத்திடும் ஆற்றல் காணோம்—நம்மைக் காணும்போதுமட்டும், தாசானுதாசன் என்று தோத்தரிக்கிறார்கள்! ஏன் அந்தப் பிரிவினைக்கிளர்ச்சிக்காரருக்கு எதிர்ப்பிரசாரம் செய்யக்கூடாது? இதைவிட வேறு என்ன வேலை இவர்களுக்கு? இதையும் செய்யமுடியவில்லையானால், இவர்களுக்கென்ன பட்டம், பதவி! என்று மேலிடம் இடிக்கும்போலத் தெரிகிறது — அந்த இடி தாங்காமல், இப்போது கனம்கள், 'வடநாடு தென்னாடு' பேதம் பேதமை, அதைப் போக்குவதே எமது கடமை என்று பேச ஆரம்பித் துள்ளனர்.

"புது டில்லியில் இருந்துகொண்டு மத்ய சர்க்கார் ஆட்சிசெய்து வருகிறது ஆகையால் தென்னாடு முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது என்று தென்னாட்டில் பலத்த சந்தேகத்தைப் பலர் கிளப்பிவருகின்றனர். இதில் என்ன விசேஷமென்றால் சமீபகாலத்தில் நன்கு படித்தவர்கள்கூட இந்தப் பிரசாரத்தினால் ஓரளவு பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது"

அழகேசனார் திருவாய் மலர்ந்தருளுகிறார் இதுபோல, குடந்தையில் இந்தத் திங்களில்—தமது திக்விஜயத்தின்போது — மன்னிக்க வேண்டுகிறேன்—தீர்த்த யாத்திரையின்போது!!

பலத்த சந்தேகம் பரவி இருக்கிறது.

நன்கு படித்தவர்கள் கூட இந்தப் பிரசாரத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தெரிகிறதா நிலைமை!!

இந்தப் பிரசாரம் பரவாது 'பிசுபிசுத்து'விடும் என்று எண்ணிக் கொண்டிருந்தோம், இப்போது பார்த்தாலோ, இது பரவிக்கிடக்கிறது, நன்றாகப் படித்தவர்கள் கூட இதை ஒப்புக்கொண்டு பேசுகிறார்கள், — என்பது அழகேசனாரின் கருத்துரை, அம்மி நகருகிறது என்று பொருள்!! பாடுபட்டு வருகிறோம், பலன் தெரியத் தொடங்கி விட்டது! அமைச்சர்கள் 'ஜல்லடம்' கட்டுகிறார்கள் — அவர்களை அந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டிருக்கிறது, நமது பிரச்சாரம்!!

என்னதான் சமாதானம் சொல்லுங்கள், வடநாடுதான் ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்திய அரசியல் சட்டதிட்டமே வடநாட்டு ஆதிக்கத்துக்கு வழி வகுப்பதாகத்தானே அமைந்திருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தின்புள்ளி விவரம் கூறும் கதையைப் பார்த்தால், நன்றாகத் தெரிகிறதே தென்னாடு புறக்கணிக்கப்படுவது.

இவ்விதமெல்லாம் படித்தவர்கள், அழகேசனார் காதுபடச் சொல்லியிருக்கிறார்கள் போலிருக்கிறது. இவர்களுக்கு மறுப்புரை, தெளிவுரைகூற முடியாமல் திண்டாடி இருக்கிறார் என்றும் தெரிகிறது—எனவேதான் திடுக்கிட்டுப் போனநிலையில் பேசுகிறார் திருவாளர் அழகேசனார், நன்றாகப் படித்தவர்களும்……! இப்படி எண்ணுகிறார்களே, என்று கூறி, ஆயாசப்படுகிறார். அடித்த கட்டம் அச்சம்!! கேடேதென்னவாக இருக்க முடியும்!!

அமைச்சர் சுப்ரமணியம் திகைப்புக்கு இடமளிக்கவில்லை, நீ மிதிக்கிறார்! தென்னாடு ஐந்தாண்டுத் திட்டத்திலே புறக்கணிக்கப்பட்டது, ஓரவஞ்சனையாக நடத்தப்பட்டது என்ற புகாரை, நான் அதிகார்பூர்வமாக மறுக்கிறேன், என்கிறார்!!

அமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறது, அதனால் மறுக்கிறார் என்பதுதான் இதற்குப் பொருள்!

அமைச்சர் அதிகாரம் இவருக்கு அளிக்கப்பட்டிருப்பதே இப்படி மறுப்புரைகள் பேசத்தான் என்பதும் நமக்குப் புரிகிறது.

ஆனல், மக்கள் அறிய விரும்புவது, இவருக்கு உள்ள அதிகாரம் எத்தகையது என்பது அல்ல; அவர்கள் இன்று நினைவுப் பரணையிலே, பல மாஜி அமைச்சர்களை அடுக்கிவைத்திருக்கிருர்கள்—வர்க்கியும் மாதவமேனனும், குருபாதமும் ஜோதியும், அவினசியாரும் வேங்கடசாமியாரும், ராஜாராமரும் பிறரும், அதிகாரம் பெற்றிருந்தவர்கள்—இன்று,...பார்மோசாக்களிலே

## சிலையும் சிந்தனையும்

அரிச்சந்திரபுரம் எனும் சிற்றூரில் கரம்பாகக்கிடந்த இடத்தைவயலாக்குவதற்காக டிராக்டர்கொண்டு உழுதபோது, எட்டடி உயரமுள்ள புத்தர் சிலை கிடைத்ததாம்! துளியும் சேதமில்லையாம்!! குடந்தை நிருபரொருவர் இந்தச் செய்தியைத் தருகிருர். இனி புத்தர் சிலை இங்கு இருக்கக் காரணம் என்ன என்ற ஆராய்ச்சியும், புண்ய பூமியில் மட்டுமே இப்படிப்பட்ட அபூர்வச் செல்வம் கிடைக்க முடியும் என்ற பூரிப்பும் வெளிவரும். புத்தபிரானுடைய சிலைகிடைத்ததில் திருப்திதான், என்றபோதிலும், ஸ்ரீ ராமபிரானுடைய சிலையாக இருந்திருந்தால், பரிபூரண திருப்தியாக இருக்கும் என்று பக்தர்கள் கூறிடக்கூடும்! இங்கு கிடைப்பது இது! வடக்கே அசாமில், எண்ணெய்க் கிணறு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; என்றோர் செய்தி வெளியாகி இருக்கிறது. பெட்ரோல் கிடைக்க வழி ஏற்படுமாகையால் இந்தக் கண்டுபிடிப்பு அசாம் ராஜ்யத்தின் செல்வ நிலையை வெகுவாக வளமாக்கும் என்று நிபுணர்கள் கூறுகிருர்கள். கேவலம் பிசாசு என்றும், மாயை என்றும் ஞானவான்களால் கண்டிக்கப்படும் 'பணம்' தானே, கிடைக்கும் எண்ணெய்க் கிணறு மூலம், இங்கு, பரலோகத்துக்குத் தேவையான பக்திச் செல்வம் பெருக அல்லவா வழி கிடைத்திருக்கிறது, என்று வைதீகர்கள் கூறிப் பெருமிதமடையக் கூடும்!!
பழிக்குள் புதைபொருளாகும் நிலை
புத்தர் சிலைக்கு ஏன் ஏற்பட்டது? இங்கு இதுபோலப் பல்வேறு இடங்களிலே, புத்தர் சிலைகளும், புத்தமதச் சின்னங்களும் அவ்வப்போது கிடைக்கின்றனவே, இதிலிருந்து, புத்தமதம் இங்கு ஒருகாலத்தில் நன்ருகப் பரவி இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது அவ்விதமிருந்த புத்தமதம், ஏன் இங்கு அழிந்துபட்டது? யாரால் அழிக்கப்பட்டது? என்ற ஆராய்ச்சியில்ஈடுபடச் சிலருக்காவது தோன்றக்கூடும். சிலை, அவ்விதமானதோர் சிந்தனையைக் கிளறிட உதவும்.

வாசம்! கனம் சுப்ரமணியம் அவர்கள்மட்டும் என்ன! கனமாவதற்கு முன்பு அவரை நாடு அறியாது; கனம் குறைந்ததும் நாடு நாடாது! எனவே, அவர் நமது குற்றச்சாட்டுகளை 'அதிகாரபூர்வமாக' மறுக்க முனையவேண்டாம், நமக்கு நல்லறிவு கொளுத்தவாவது புள்ளி விவரம் காட்டி மறுக்க முன்வரட்டும்! வக்கு ஏது அதற்கு! திருச்சிக் கூட்டத்துச் சுப்ரமணியனுரை, பெரிய நாயக்கன்பாளையத்தில் பேசிய சுப்ரமணியனுர், இழித்தும் பழித்தும், என்னே இச்சிறுமதி! ஏனே இந்தக் கெடுமதி! இங்கொன்று அங்கொன்ரு? உள்ளொன்று புறமொன்ரு?—என்று இடித்து இடித்துக் கேட்பாரே!

ஒரு அநீதியும் இழைக்கப்படவில்லை என்று திருச்சியில் பேசிய திருவாய், ஏன் பெரியநாயக்கன்பாளையத்திலே, வேறு விதமாக மென்றது என்று அறிய நாட்டார் விரும்புகிருர்கள். அங்கு அவர்,

வடநாடு சென்றறியாதவர்கள் தான், இப்படிப் பேசுகிருர்கள் என்று பேசி, நம்மை நிந்திப்பதாக எண்ணிக்கொண்ட, இவரை ஒத்த நிலையிலுள்ள பலரைப் பழித்துப் பேசுகிருர்.

வடநாடு செல்கிருர், இவர்; அறிவோம்; காவடி தூக்கிடும் காலம் செல்ல வேண்டும் அடிக்கடி, அறிந்திருக்கிறோம். வடநாடு நாம் சென்றறியோம் என்று பேசி, தமது ஞானசூன்யத்தைக் காட்டிக் கொள்ளட்டும், குறுக்கிடவில்லை; ஆனல் நாம் போனதில்லை என்றே வைத்துக்கொள்வோம், அம்புஜம் அம்மையாரென்ன, அநுமந்தையா என்ன, கேசவமேனன் அன்னமஸ்கரினிஸ், சுதேசமித்திரன் ஆசிரியர் சீனுவாசனென்ன, இவர்களெல்லாம். கண்டித்திருக்கிருர்களே வடநாட்டு ஆதிக்கத்தை—அமைச்சர் அப்போதெல்லாம், ஏன் வாயடைத்துக் கிடந்தார்!!

"தொழில் முறையில் சென்னை மாகாணம் பின் தங்கிய நிலையிலிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எந்த அளவுக்கு இந்திய அரசாங்கத்தின் கவனத்தைத் தென்பகுதி பெறவேண்டுமோ அந்த அளவுக்குப் பெறவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை" என்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது தமிழ்நாடு 24—6—55ல்!!

அமைச்சர் என்ன பதிலளிக்கிருர் இதற்கு!! அடுக்கடுக்காக ஆதாரங்களைக் கொட்டிக் குவித்துக் காட்டிவருகிறோம், எதை மறுத்தார்—எதை மறுத்திட முடியும்? நாள் தவருமல் வந்த வண்ணமிருக்கிறதே, நன்ருகப் படித்தவர்களையும் கவரும் வகையில்! எப்படி இதனைத் தடுத்திடப் போகிருர் வாய்ப்பறை கொண்டு ஊர்ப்பகை தேடிக்கொள்ளும் இந்த உத்தமர்!

காரமான ஒரு சிறு துண்டு தருகிறேன். — இப்போது தான் பறித்தெடுத்தது— அமைச்சர் பதவியைச் சுவத்திடும் வாயால் இதையும் சிறிதளவு சுவைத்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இங்கு, மிளகாய் உற்பத்தி அதிகமாகிச் சரக்குத்தேங்கிக்கிடக்கிறது.

இதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடும் அனுமதி டில்லி தான் தரவேண்டும்! ஆதிக்கம் அவ்விதம் அமைக்கப்பட்டிருக்கிறது.

மிளகாய்க்கு மட்டுமல்ல எதற்கும் இதே தான், நிலைமை.

மிளகாயைப் பொறுத்த மட்டில் இங்கு சரக்குக் குவிந்து கிடக்கிறது, வெளிநாடுகளுக்கு அனுப்பும் அளவு டில்லி நிர்ணயித்திருப்பது போதுமானதாக இல்லாததால்.

எனவே, டில்லி பாதுஷாக்களே! அருள்கூர்ந்து, மிளகாய் ஏற்றுமதியின் அளவைச் சற்றே அதிகப்படுத்தித் தருவீராக! — என்று சென்னை வர்த்தக சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்றசெய்தி அமைச்சர் தீப்பொறி பறக்கத் திருச்சியில் பேசிக்கொண்டிருக்கும்போது வெளிவருகிறது. ஜூன் 21 தேதிய பத்திரிகைகளைப் பார்க்கலாம்—தேசிய இதழ்களையே!!

தென்னட்டின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதற்கு இது சான்று அல்லவா!

வடநாட்டு ஆதிக்கம் இருப்பது மட்டுமல்ல, இந்தச் செய்தி மூலம் தெரிவது.

வர்த்தக சபை கூறுகிறது. இங்கிருந்து மிளகாய் வெளிராஜ்யங்களுக்கு (வடக்கே உள்ள ராஜ்யங்கள்) சென்று அங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

தம்பி, தெரிகிறதா இதிலே காணப்படும் அக்ரமம்!

வெளிநாட்டுக்கு, மிளகாய் நாம் நேராக அனுப்ப முடியாது, டில்லி அனுமதிக்க வேண்டும்,

டில்லியோ, மிகக் குறைந்த அளவுதான் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கிறது.

இங்கே சரக்குத் தேங்கிவிடுகிறது.

தேங்கிக் கிடக்கும் சரக்கை, வடநாட்டு ராஜ்யங்கள் இங்கிருந்து தருவித்துக்கொள்கின்றன.

அங்ஙனம் தருவித்திடும்சரக்கை அந்த ராஜ்யங்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இலாபத்தை அனுபவிக்கின்றன.

**"அனுகூலம் இங்குள்ள உற்பத்தியாளருக்கோ வியாபாரிக்கோ கிடைப்பதில்லை."** என்று வர்த்தக சபை தெரிவிக்கிறது, நாசுக்காக. பச்சையாகக் கூறுவதானால், இங்குள்ள விவசாயி வயிற்றிலும், வியாபாரியின் வாயிலும் அடித்து, வடநாடு மிளகாய் ஏற்றுமதிமூலம் இலாபம் பெறுகிறது, என்பதுதான்!

இதற்கு என்ன பெயரிடுவது—பாரதவர்ஷத்தின் விரிந்த பரந்த மனப்பான்மை என்றா—நேரு சர்க்காரின் நேர்மை என்றா—அல்லது அமைச்சர் பதவியை சுப்பிரமணியனார்கள் ஆண்டு அனுபவிப்பதற்காக, நாட்டு மக்கள் தரும் 'முறிப் பணம்' என்பதா — என்ன பெயரிடச் சொல்கிறார் அமைச்சர்—எப்படி இந்த அக்ரமத்தைச் சகித்துக் கொள்ள முடியுமென்கிறார். வடநாடு தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தாமலிருந்தால், இந்த அநீதிக்கு இடம் ஏது?

மிளகாய்பற்றிய சம்பவம் காரம் அதிகம் கொடுத்திடும்; 'கனம்' தாங்கமாட்டார், எனவே, தம்பி, அவருக்குச் சிறிது ருசியும் பசையும் உள்ள பண்டம் குறித்த சம்பவத்தைத் தருவோம்.

பஞ்சாப், ராஜஸ்தான் பகுதிகளிலிருந்து, இங்கு, பருப்பு நவதானியம் தருவிக்கப்பட்டு வருகிறது. தம்பி! இதற்கு இரயில்வே வாகன்கள் போதுமான அளவு கிடைப்பதில்லை. ஏன்? வாகன்களின் அளவு குறித்த அனுமதி அளித்திடும் அதிகாரம் அங்கே இருக்கிறது—டில்லியில்! இதனால், போதுமான அளவு வாகன்கள் கிடைக்காமல், திகைப்பும் பொருள் இழப்பும் ஏற்படுகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு அங்கு வாங்கி வைக்கப்பட்டுள்ள சரக்கு, வாகன்கள் கிடைக்காததால், பஞ்சாபிலும் ராஜஸ்தானிலும் கிடக்கின்றன—வெயிலும் மழையும், எலியும் பிறவும் பண்டத்தைப் பாழாக்குகின்றன — இங்கு மார்க்கட்டில் விலை சூடு பிடிக்கிறது, அங்கே வாங்கிய சரக்கு, முடமாகிக் கிடக்கிறது, ஏன் தம்பி! இந்த நிலை வரவேண்டும்? வடநாடு பார்த்து வைப்பதுதான் சட்டம், திட்டம் என்று இருப்பதால்தானே, வாகன் கிடைக்குமா என்று, இங்குள்ளவர்கள் தவம் கிடக்கவேண்டி வருகிறது, வரம் தாருமய்யே என்று தென்னிந்திய வர்த்தக சங்கம் அறிக்கைமூலம் இறைஞ்சுகிறது டில்லியை! ஜூன் 21ம் நாள் இதழில் இதையும் காணலாம்.

அக்ரமம், இன்னும் வெளிப்படையாகவே தெரிகிறது தம்பி அந்த அறிக்கையில்.

**பம்பாய்—கல்கத்தாவுக்குமட்டும் வாகன்கள் தேவையான அளவு ஒதுக்கப்பட்டு சென்னை புறக்கணிக்கப்படுகிறது** என்றும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. பதவியைச் சுவைத்திடும் மகிழ்ச்சியில், 'கனம்' இங்கு நம்மீது காய்கிறார், பாய்கிறார்!

தம்பி! 'கனம்' சைவரோ, சுவையும் சத்தும் தேவை என்பதற்காக 'அன்னிய பதார்த்தம்' சாப்பிடுகிறவரோ, எனக்குத் தெரியாது—சைவராக இருந்தால் சிறிது நெடியாக இருக்கும்; இல்லையானால், நாவில் நீர் ஊறும், இப்போது தரப்போகும் சம்பவத்தைக் கவனித்தால்.

ராட்டு என்கிறார்கள்—இறா என்பார்கள்—அந்தக் கடற்கனி ஏராளமாகப் பர்மாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது, திருவிதாங்கூர் கொச்சி பகுதியிலிருந்து, பெரும் அளவில், இதை நம்பி வாழும் மீனவர்கள் ஏராளம்—வியாபாரிகளும் உளர். இப்போது பர்மா சர்க்கார், இதற்கான அனுமதி வழங்கும் முறையிலே கட்டுத் திட்டம் கடுமையாக ஏற்படுத்திவிட்டிருக்கிறது; இந்த ஏற்றுமதி சிதைந்துவிட்டது. இதன் பயனாக இலட்சக்கணக்கான மீனவர் குடும்பங்கள் அல்லற்படுகின்றன. பிரச்சினை சிறியதல்ல தம்பி! பண்டம் வேண்டுமானால், சாதாரணம் என்பர். எட்டு இலட்சம் மீனவர்களின் வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறது. மூன்று கோடி ரூபாய் பெறுமானமுள்ள பண்டம் தேங்கிக் கிடக்கிறது. அஜீத்பிரசாத் ஜெயின் எனும் வடநாட்டு மந்திரியிடம்தான் முறையிட்டுக் கொள்ளவேண்டி இருக்கிறது. பர்மா போன்ற வெளிநாட்டுச்சர்க்காரிடம் பேசவும், வசதி வாய்ப்பு, சலுகை உரிமை இவைகளைப் பெறவும், இங்கே உள்ள அமைச்சர் அவைக்கு அதிகாரம் ஏது? எல்லாம் டில்லியப்பன் தானே! எதற்கும் டில்லியப்பன் துணையும் தயவும் இருந்தால்தான் நடக்கும். எனவே, அஜீத் பிரசாத்துக்கு விண்ணப்பம் அனுப்பப்படுகிறது, "ஐயனே! மீனவரைப் பாரீர்! அவர் குறை தீர்த்திட வாரீர்! பட்டினியால் வாடுகிறோம், பண்டம் பாழாகிறது, பிழைப்பிலே மண் விழுகிறது" என்று கெஞ்சுகிறார்கள். "அப்படியா, உமக்குற்ற குறைபற்றி நாம் இனி எண்ணிப் பார்த்திடுவோம், எமது அண்டை நாடாம் பர்மாவின் இந்தப் போக்குக்கு உள்ள காரணம் யாவை என ஆராய்ந்தபின், யாது செய்திடல் முறை என்பதுபற்றி எண்ணித் துணிவோம்!' என்று பேசுகிறார் அஜீத்! அவரா பேசுகிறார், வடநாட்டு ஆதிக்கம் பேசுகிறது!! திருச்சியில் பாருங்கள், "திரிலோகமும் புகழும் சுந்தரன்! வீரன்! சூரன்! யானே," என்று கனம் பாடுகிறார்.

ராஜாசிதம்பரனார்,

"ஆமாம்! இதை அறியேன் முன்னாலே

---

முகப்பில்.......

## ஐக்யநாடுகள் சபை

**1945-ம் ஆண்டு ஜூன் 26-ம் நாள் துவக்கப்பட்ட ஐக்யநாடுகள் சபையின் அபூர்வ முறையில் அமைந்துள்ள நிலையம் இது.**

**அமெரிக்காவில், சான்பிரான்சிஸ்கோ நகரில் 50-நாடுகளின் இசைவுடன் துவக்கப்பட்ட ஐக்யநாடுகள் சபையின் பத்தாண்டு விழா நடைபெற்றிருக்கிறது.**

**அமெரிக்காவின் 'கைப்பாவை' என்று இதனைக் கருதக்கூடிய முறையில், இதன் நடவடிக்கைகள் சில அமைந்திருக்கின்றன, என்ற போதிலும், உலக சமாதானத்துக்கு இது ஒரு சிறந்த சாதனமாகும் என்ற நம்பிக்கை கொண்ட பல நாடுகள், ஐ. நா. வில் ஆர்வத்துடன் பணியாற்றிக் கொண்டு வருகின்றன.**

ஆகவே என் பிழை பொறுத்து
ஆதரிக்க வருவீர், ஐயே!
என்று 'ட்யூட்' பாடுகிருர்!

செக்கிழுத்தார் சிதம்பரனுர் என்ற நெஞ்சை நெக்குருகச் செய்யும் சேதியை எடுத்துச் சொல்லிச் சொல்லி, பெரும் பலன் கண்டனர் காங்கிரசார். "கப்பலோட்டிய தமிழன்" வாழ்க்கைக் கலம் சுக்குநூருயிற்று, அந்தச் சோகக் காதையைக் கூறிக்கூறி, இன்று அரசியல் உல்லாசப் படகினிலே ஒய்யாரமாகச் செல்கின்றனர் பலர்! இதோ கேள், தமபி, ஒரு கப்பலின் கதை கூறுகிறேன்.

சென்னை—ரங்கூன் செல்லும் கப்பலொன்று, சிந்தியா கம்பெனியார் நடத்திவந்தனர்.

முன்பு வெள்ளைக்காரக் கம்பெனி நடத்திவந்த தொழில், சுதேசி இயக்க தத்துவம் காரணமாக, சிந்தியாவுக்குக் கிடைத்தது.

சிந்தியா கப்பல்விட ஆரம்பித்ததும், வெள்ளைக்காரக் கம்பெனி விலகிக்கொண்டது.

இருபது நாட்களுக்கு ஒரு முறை சிந்தியா கப்பல்செல்லும்.

இதிலே இங்கிருந்து, ஏழை எளிய மக்களே ஏராளமாகச் செல்வர்—கட்டணம் அதற்குத் தகுந்தபடி இருந்துவந்தது.

பர்மாவுக்கு இங்கிருந்து பண்டங்கள் போகும்.

பர்மாவிலிருந்து தேக்கு முதலிய பண்டங்கள் இங்கு வரும்.

மொத்தத்தில், தென்னுட்டவருக்கு வசதியானது, இந்தக் கப்பல் போக்குவரத்து.

நஷ்டம் என்று காரணம் காட்டியும், கப்பல் பழசு பழுதாகிவிட்டது, புதுப்பிக்கப் பெரும பொருள் செலவாகும், என்று கூறி, சிந்தியா இப்போது இந்தக் கப்பலை நிறுத்தி விட்டது.

ஏழைக்கு இடி! சென்னை—ரங்கூன் வியாபாரத் தொடர்புக்குத் தாக்குதல்—கண்டனம் கிளம்பி இருக்கிறது.

இனி, சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குக் கப்பலில் சென்று, அங்கிருந்து பர்மாவுக்குக் கப்பல் தேட வேண்டும்.

அந்தக் கப்பலில், ஏழைகளுக்கான 'மேல்தட்டு' பிரயாண வசதி மலிவான கட்டண வசதி—அதிகம் கிடையாது.

இப்போது செலவாவதுபோல இரட்டிப்புச் செலவாகும்.

பண்டங்களை அனுப்புவதிலும், பாரம் ஏறும்.

பாரம் ஏறினால், வடக்கே வங்கம், வங்கத்துக்கு அருகே உள்ள இடங்களிலிருந்து கிளம்பும் சரக்குடன், தென்னகத்துச் சரக்கு போட்டியிட்டுச்சமாளிக்கமுடியாது.

இவ்வளவு இன்னல் இருக்கிறது! ஏன் என்று கேட்கவோ, சிந்தியா போனால் என்ன, இதோ ஒரு விந்தியா என்று கூறிக் காரிய மாற்றவோ, சென்னையால் முடியாது! டில்லி கண் திறக்க வேண்டும்!

**நஷ்டஈடு தந்து சிந்தியாவைத் தொடர்ந்து கப்பலை நடத்தச் சொல்லலாம்.**

**புதிதாகக் கப்பல் உதவலாம், அல்லது பழுதுபார்க்க வசதி செய்து தரலாம்.**

**எதையாவது இந்தியசர்க்கார் செய்ய வேண்டும்.**

தினமணியின் அழுகுரல் கேட்கிறது, இது போல, ஜூன் 23ல். ஏன் சிதம்பரனுரின் கண்ணீரும் செந்நீரும் சிந்திப் புனித புரியாக்கப்பட்டுள்ள தென்னகத்துக்கு இந்த அவல நிலை, என்று நாம் கேட்கிறோம், வடநாடு தென்னுட்டை அடிமைப் படுத்திற்ரு? யார் சொன்னது, இதோ என்னைப் பாருங்கள், என்று கேட்கிருர், அமைச்சர் சுப்பிரமணியனுர், "பார்க்கிறேன்! பெருமூச்சு எறிகிறேன்! பாவியேன் இந்தப் 'பரிசு' கிடைக்குமா கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கிறேன்! கனமாகும் காலத்தை, கடவுளே! சீக்கிரம் தாருமே" என்று மலைபோன்ற உடலை வில்போல வளைத்தபடி, வரம் கேட்கிருர், வாங்கிய கடனைத் திருப்பித்தராமல் 'இன்சால்வெண்ட்' போட்டிடும் போக்கில், தேர்தலின்போது மக்களிடம் அளித்திட்ட வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு, சேற்றை வாரியும் நம்மீது வீசிடமுற்பட்டிருக்கும் ராஜா சிதம்பரனுர்! அந்தச் சிதம்பரனுர் பிறந்த அதே நாட்டில் இப்படியும் ஒரு சிதம்பரனுர்!

தம்பி! நமது கழகத்துக்கு நாட்டிலே வளர்ந்துவரும் செல்வாக்குக் கண்டு, ரோஷம் பொங்கி இப்படிப் பேசுகிருர்போலிருக்கிறது இந்தக் 'கனம்' — ஒப்புக்கொள்ள மறுக்கிருய்—துவக்கத்திலேயே தான் சொல்லிவிட்டாயே, காரணம் எனக்கும்தெரிந்ததுதானே—**ரோஷக்காரராக இருந்திருந்தால் இவர் ஆச்சாரியாருடைய தொண்டரடிப்பொடி ஆழ்வாராகஇருந்த** போது புகுத்தி, போற்றிப் பாராட்டிய குலதர்மக் கல்வித்திட்டத்தை, காமராஜர் கட்டளையிட்டதும், குழி தோண்டிப் புதைத்துவிட்டுச் சுடலைக் காசுபோல, பதவியைப் பெற்றுக்கொண்டிருப்பாரா! "என் திட்டம் இல்லையா. அப்படியானுல் நான் பதவியில் இரேன். நான் ரோஷக்காரன், கொங்கு வேளாளர் குடிப்பிறந்த எவரும், இப்படிக் குட்டக்குட்டக்குனிந்துகொடுத்து, எட்டுக் குட்டுக்கு ஆறணு எடு, ஆருறு முப்பத்தாறு இரண்டேகால் ரூபா, என்று கேட்கும் போக்கில் இருக்க மாட்டார்கள். அதற்கு வேறு ஆளைப் பாருமய்யா, நான் இதோ பதவியைவிட்டுப் போகிறேன், கோர்ட் அழைக்கிறது, கொங்கு நாடு அழைக்கிறது, மானம் கட்டளையிடுகிறது, ரோஷம் குத்திக் குடைகிறது"—என்று கூறியல்லவா, வெளிஏறியிருந்திருக்கவேண்டும். மந்திரியாகத்தானே இருக்கிருர்.

"அவர் கட்டிய தாலியை இதோ அறுத்தெறிந்துவிட்டேன், சுவரேறிக் குதித்து வந்த சுந்தரனே! கட்டு தாலி உன் கையாலே! அதற்கும் விருப்பம் இல்லையேல், அதுவும்வேண்டாம், வேளைக்குச்சோறு, சாயம்போகாச் சேலை, சாயந்திரத்தில் மல்லி, சாய்ந்துகொள்ள மெத்தை..." என்று பட்டியல் கூறிடும் கண்வெட்டுக்காரி, மன்றம் ஏறிவாழும் வழிபற்றிப் பேசிடுவதில்லை; அமைச்சரல்லவா, பேசுகிருர்! பேசட்டும், தம்பி! பேசட்டும்! பூர்ணகும்பம், அர்ச்சகர் சங்க வரவேற்பு, நிலப்பிரபுவின் விருந்து பசாரம். இது கூடவா, பேசக்கூடாது. பேசட்டும், தம்பி, பேசட்டும்.நமது வேலையை இந்தப் பேச்சும் ஏச்சும், துளியும் பாதிக்காது.

அன்புள்ள,

**அண்ணுத்துரை.**

REGD No. 4642

திராவிடநாடு

போன் நெ. 15.




## அவர்கள் திறமை

பாரத் வர்ஷம்! பரதகண்டம்! ஜே இந்த்! என்றெல்லாம் கோஷமிடட்டும், நாங்களும் வேண்டுமானால் கூடச் சேர்ந்து கூச்சலிடுகிறோம்; ஆனால் எங்கள் இராஜ்யத்துடன் சேர வேண்டிய பிரதேசத்தைமட்டும் எப்படியும் பெற்றே தீருவோம்; வந்தே மாதர மந்திரத்தைக் கொண்டு எங்களை ஏமாற்றிவிட முடியாது, அதற்கு இடம் கொடோம்— என்று கூறும் போக்கிலே உள்ளனர் ஆந்திரர். உலகிலே அவருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு இருக்கலாம், ஆனால், எமது கோரிக்கையை அவர் அலட்சியம் செய்வது கண்டு நாங்கள் சும்மா இருக்க மாட்டோம் என்று நேரு பண்டிதருக்கே 'கடுக்காய்' கொடுத்து, காரியத்தைச் சாதித்துக் கொண்டவர்களல்லவா! பாஷாவாரி மாகாணம் கேட்பது ஒரு பித்தம், வெறி, இதை நான் அனுமதிக்கப் போவதில்லை என்று முழக்கமிட்டுப் பார்த்தார்! தேசத்தில் உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய எவ்வளவோ விஷயங்கள் உள்ளன, இப்போது ஆந்திர மாகாணத்துக்கு என்ன அவசரம் என்று கேட்டார். உண்ணாவிரதம் நடத்தி என்னை மிரட்டவாபார்க்கிறீர்கள் — அதற்கு வேறு ஆளைப் பாருங்கள் என்றார்! வாடிக்கையாக அவருக்கு உள்ள கோபத்தைக் கொட்டிக் காட்டினார். ஆந்திர மக்கள் அசைந்து கொடுக்கவில்லை; பெருங் குழப்பம் விளைவித்தனர்; பண்டிதர் பீதி அடைந்தார்; தந்தேன் ஆந்திர மாகாணம் என்று அவசரஅவசரமாகக் கூவினார்—இல்லையானால் நிலைமை மிக மோசமாகிப் போயிருக்கும்-நேருவாவது காருவாவது என்று எடுத்தேன் கவிழ்த்தேன் போக்கிலே பேசி, புரட்சி செய்திருப்பர், ஆந்திர மக்கள். இப்போதும் பாருங்கள் அவர்களின் சுறுசுறுப்பை. பெல்லாரி வட்டம் மைசூரில் இணைக்கப்பட்டிருக்கிறது; இது ஆந்திரத்துக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி, இதைச் சகிக்கமாட்டோம், உரிமைக்காகப் போராடியே தீருவோம் என்று ஆந்திரர் முழக்கமிடுகின்றனர். சின்னாட்களுக்கு முன்பு பாபு ராஜேந்திர பிரசாத் பெல்லாரி வழியாகச் சென்றார்; அது அறிந்த ஆந்திர மக்கள் பல்லாயிரவர் கூடி, பெல்லாரி ஆந்திராவுக்கே! ஆந்திராவில் பெல்லாரி சேர்க்கப்பட வேண்டும்! என்று முழக்கமிட்டு, ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். இது துவக்கம்!! பண்டிதர் சர்க்கார் இதைக் கவனியாமல் இருந்தால், பிறகு, ரயில்களைக் கொளுத்துவதும், தண்டவாளங்களைப் பெயர்ப்பதுமான ஆகஸ்டுகளை ஆந்திரர் ஜரூராக நடத்துவர்! அவர்களால்முடிகிறது! இங்கே தமிழ் மக்கள், 'எல்லைப்போர்' நடத்தும் இலட்சணத்துடன், ஆந்திரர் நடாத்தும் கிளர்ச்சியை ஒப்பிட்டால், வெட்கம் வேலாகத்தான் குத்துகிறது.

## அனுமாரும்-அமெரிக்காவும்

குரங்கு — அனுமாரல்லவா, நமது புராண புருஷரலலவா அனுமார்— அவர் வம்சத்தில் வந்த குரங்குகளை, அமெரிக்காவுககு விற்பனை செய்கிறார்களே, அங்கு குரங்குகளை விஞ்ஞானப் பரீட்சைகளுக்காகக் கொன்றுபோடுகிறார்களே, இந்த அக்ரமம் அடுக்குமா! இந்தப் பாபம் சும்மா விடுமா என்றெல்லாம் வைதீகர்கள் கிளப்பிய கூக்குரலுக்கு இணங்கி இந்திய சர்க்கார், அமெரிக்காவுக்குக் குரங்குகளை அனுப்புவதில் தயக்கம் காட்டிற்று. இப்போது ஐந்து டாலர் முதல் ஒன்பது டாலர்வரை விலை கொடுத்து அமெரிக்கா 10,000 குரங்குகளை பிலிப்பைன்ஸ் தீவிலிருந்து வாங்கிக்கொள்கிறார்களாம்! அனுமாரின் இனத்துக்கு நேரிட்டுள்ள இந்த ஆபத்தைப் போக்க, பண்டித நேரு, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்களைக் கண்டு பேசவேண்டும் என்று வைதீகர்கள் இனிக் கிளர்ச்சி துவக்க வேண்டும்!! பாண்டுங் மாநாட்டில், கலந்துகொண்ட நாடு என்ற முறையில் பிலிப்பைன்ஸ், பண்டிதரின் வேண்டுகோளை நிராகரிக்காது என்று 'ராஜீய விவகாரம் அறிந்த வைதீகர்கள், வாதாடக்கூடும். இதற்காக ஒரு சத்சங்க சம்மேளனம் கூட்டும் பொறுப்பு திவான்பகதூர் இராமஸ்வாமி சாஸ்திரியாரிடம் ஒப்படைக்கப் படலாம் என்று வைதீக வட்டாரம் கூறக் கூடும். ஊருருக்கும் அனுமார் கோயில்கள் உள்ளன இங்கு. இதையே காரணமாகக் காட்டி, இந்தியாவின் மத நம்பிக்கையை, புண்படுத்துவதாக அமெரிக்காவின் போக்கு இருக்கிறது என்று எடுத்துப் பேச இங்கிருந்து சில பிரசாரகர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கலாம் என்றுகூற வைதீகர்கள் முற்படக் கூடும். எனக்கு மந்திரி வேலை கிடைத்ததே, அனுமாரின் அருளால் தான், என்று கூறிப் பக்திப்பரவசராகி பூஜை செய்தார், கனம். இராமசாமிப் படையாச்சி. எனவே, அவரே இந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதற்குத் தகுதி வாய்ந்தவர், என்று வைதீக வட்டாரம் கருதி, அவருக்கு 'மகஜர்' அனுப்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த விசித்திர நாட்டிலே, எதுவும் நடக்கும்!!

படிப்போரும் படிக்கப்பக்கமிருந்து கேட்போரும் புண்யம் பெறுவர் என்று புகழுரை பெற்றுள்ள அனுமத்பிரபாவ புராணம் இருக்கும் பாரத்வர்ஷத்திலிருந்து, குரங்குகள் அமெரிக்காவுக்கு கொல்லப்படுவதற்காக அனுப்பப்படுகின்றன! ஆனால் அமெரிக்காவிலிருந்து இப்போது இங்கு கொண்டு வரப்பட்டுள்ள ஜிப்பி எனும் குரங்கு, மாளிகை வாசம், மனோஹரமான உணவு, இலட்சக்கணக்கில் பணம், நிருபர்கள் பேட்டி எனும் இவ்வளவு சுகானுபவத்தோடு இருக்கிறது! பல பேருக்குக் கனவிலும் கிடைத்திராத சான்சே கிடைத்துவிட்டது. பாருங்களேன் இந்த அமெரிக்கக் குரங்குக்கு—மோகனா எனும் சினிமா அழகியை முத்தமிட்டதாம்!! குரங்காக இருந்தாலும், அமெரிக்காவிலிருந்து வருகிறது என்றால் நேரு நாட்டில் சீராட்டத்தான் செய்கிறார்கள்! ஜேய் இந்த்!!

Edited, Printed & Published by C N. Annadurai M. A., at 'Dravida Nadu" Press
95, Tirukkachinambi St. Kancheepuram.